Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | வைகாசி-02 | 16-05-2005 | திங்கட்கிழமை | ஓசை 87

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225387



தேசியத் தலைவர் அவர்களுடன் போராளிக் கலைஞர் இதயராஜ்.

## லெப். கேணல் நவம் நினைவு நிகழ்வும் போராளிக் கலைஞரின் மிருதங்க அரங்கேற்றமும்

(அலுவலக செய்தியாளர்)

லெப். கேணல் நவம் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், போராளிக் கலைஞர் இதயராஜின் மிருதங்க அரங்கேற்றமும் நேற்று நவம் அறிவுக்கூட அரங்கில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்ற இந் நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் யோகரத்தினம் யோகி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தளபதி கேணல் ரமேஷ் ஏற்றினார். தொடர்ந்து லெப். கேணல் நவம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அருச்சனா சுடரேற்ற, நவம் அவர்களின் சகோதரி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து போராளிகளும், பொதுமக்களும், பொறுப்பாளர்களும், கலைஞர்களும் மலர் வணக்கம் செலுத்தியதோடு, அரங்க நிகழ்வுகள் போராளி வித்தியின் தலைமையில் ஆரம்பமாகின.

இதில் போராளிகளின் கவியரங்கு, மாவீரர் நினைவு நடனம், தேசியத் தலைவர் வாழ்த்து நடனம் என்பன நிகழ்த்தப்பட்டதோடு, விழிப்புலன்களை இழந்த நவம் அறிவுக்கூடப் போராளிகளான போராளி செந்தூரனின் ஆலோசனையில் போராளி பிறையாளனால் உருவாக்கப்பட்ட தலைவரின் சிந்தனைகள் அடங்கிய நூலும் வெளியிட்டு வைக்கப்பட் (12ஆம் பக்கம் பார்க்க)

# தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இன்று தாயக மருத்துவமனைக்கு அத்திவாரம் இடுகிறோம்

## அத்திவாரக்கல் நாட்டும் நிகழ்வில் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**தமிழீழ தாயகத்திலே எங்கள் மக்களுக்கான மருத்துவ, சுகாதார தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற எமது தேசியத் தலைவருடைய கனவும் எதிர்பார்ப்பிற்கும் ஏற்ப அத்திவாரத்தை இன்று இட்டிருக்கின்றோம். நிச்சயமாக இந்தத் தாயக மருத்துவமனை துன்பப்பட்ட எங்களுடைய மக்களுக்கு ஆறுதலளிக்கின்ற மிகப்பெரிய சேவையை எதிர்காலத்திலே செய்யப் போகின்றது. இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியுள்ளார்.**

நேற்றுத் தாயக மருத்துவ மனையினை அமைப்பதற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தபின் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது; குறிப்பாக புலம்பெயர்ந்து வாழ்கின்ற எங்களின் மருத்துவ நிபுணர்களுடைய ஆர்வமும் உற்சாகமும் அவர்களுடைய ஈடுபாடும் தான் இந்தத் தாயக மருத்துவமனையினை உருவாக்கம் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. உண்மையிலேயே புலம்பெயர்ந்து வாழ்கின்ற எங்கள் மருத்துவர்கள் [illegible] யுத்த நிறுத்த சூழல் ஏற்பட்ட உடனேயே இங்கு மிகப் பெரிய அளவில் வந்து குவிந்தார் (12ஆம் பக்கம் பார்க்க)



டாக்டர் கெங்காதரன் அவர்கள் அடிக்கல் நாட்டுகின்றார்.

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இன்று கண்டியில் ஆரம்பம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கண்டி நகரில் உள்ள ஏர்ள்ஸ் ரீஜன்சி என்ற ஐந்து நட்சத்திர விடுதியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

சனாதிபதியின் தலைமை உரையுடன் காலை ஒன்பது மணிக்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பமாகும் இந்த இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக 107 இற்கும் மேற்பட்ட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கண்டி நகரிற்கு சென்றுள்ளனர்.

## இராணுவத்தினரிடையே துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி; ஒருவர் காயம்

யாழ்.கிளாலிப்பகுதியில் நேற்றுக்காலை சிறிலங்கா இராணுவத்தினரிடையே இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு இராணுவச்சிப்பாய் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இரு இராணுவத்தினருக்கிடையே விடுமுறை தொடர்பாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது துப்பாக்கிச் சூடடில் முடிவடைந்ததிலேயே இச்சம்பவம் (12ஆம் பக்கம் பார்க்க)

### கண்டியில் நடைபெறும் மாநாட்டில் ஆராயப்படும்

## சுனாமி மீள் நிர்மாண செயற்திட்டத்தில் வடக்கு-கிழக்கு ஓரம் கட்டப்பட்டுள்ளது!

### கூட்டமைப்பு பாராளு. குழுத் தலைவர் இரா. சம்பந்தன்

(திருகோணமலை)

கண்டியில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சுனாமி மீள் நிர்மாணம் தொடர்பாக ஆராய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள செயற்திட்டம் வடக்கு-கிழக்கு மாவட்டங்களை ஓரம் கட்டுவதாக அமைந்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்றகுழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் டாக்டர் சரத் அமுனுகமவிற்கு நேற்று பக்ஸ் மூலம் அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டியில் இன்று காலை ஆரம்பமாகும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் மன்றத்தின் அங் குரார்ப்பண நிகழ்வில் பங்குபற்றும்படி கூட்டமைப்பு பாராளுமன்றக்குழுவின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம அழைப்பு அனுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்து அனுப்பிய கடிதத்தில் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சம்பந்தன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கண்டி ஏர்ள்ஸ் றீஜன்ஸி விடுதியில் நடைபெறும் இலங்கை அபிவிருத்தி பொதுமன்றத்தின் அங்குரார்ப்பணக்கூட்டத்திற்குத் தான் அழைப்புக்கிடைத்தது. மகாவலி பீச் விடுதியில் நடைபெறும் அபி விருத்தி பொதுமன்றத்தின் கூட்டத் திற்கு அழைப்புக்கிடைக்கவில்லை. வடக்குக் கிழக்கிலிருந்து பாராளுமன் றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 31 உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கான 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இலங் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிளி.கட்டடப்பொருள் உற்பத்தி விற்பனை சீமெந்துக்கல்-19/= விலை, வேலித்தூண்கள் 6 அடி, 7அடி,8அடி அழகுத்தூண்வகைகள், பூக்கற்கள் (ஓட்டக்கல்வகைகள்) பூச்சாடிவகைகள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள வைத்தியசாலை பின்வீதி கிளிநொச்சி. (6136)

### தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மருதநகர் பன்னங்கண்டி வட்டக்கச்சி பெரியபாலத்திற்கு அருகில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்னைநாற்று உற்பத்திப்பகுதியில் தென்னம் பிள்ளைகளை நேரடியாகத் தொடர்பு கொண்டோ அல்லது கிளிநொச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் தொடர்பு கொண்டோபெற்றுக் கொள்ளலாம். (6127)

### வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

இடம் 79, 8ஆம் வாய்க்கால் உருத்திரபுரம இரண்டறை, கிச்சின் கிணற்றுடன் வீடு ஒன்றரை ஏக்கர் வருமானமுள்ள காணி, வயல் காணி இரண்டு ஏக்கர் இரண்டு போகம் செய்யலாம் தனி உறுதியுள்ளது. விலைநேரடியாகப் பேசித்தீர்க்கலாம். தொடர்பு எஸ். சிறிகாந்தன் ,210 ஜெயந்திநகர் கிளிநொச்சி. (5848)

### 2005-A/L

A/L பரீட்சைக்குரிய பொது அறிவு பொதுஆங்கிலம் உயர்கல்விச்சேவை நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. வன்னியிலுள்ள சகல அறிவமுது புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (6134)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும். பிள்ளையார் பொத்தக சாலை கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P 021-2285750 (சி.11869)

### தவறிவிட்டது.

ஜேடி எட்வின் ராதாதேவி என்பவரது அடையாள அட்டையும் நிரந்தர பயணஅட்டையும் புளியங்குளத்திற்கும், வவுனியாவிற்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் இல. 425 உதய நகர்மேற்கு கிளிநொச்சி எனும் முகவரியிலோ அல்லது வடபிராந்திய பாராவூர்தி கள் சங்கத்திருத்தகம் பகுதி கிளிநொச்சி என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றார். (6135)


தமிழீழ மாவட்டநீதிமன்று :-மன்னார்
வழ/இல:-28/05
தன்மை :- காணி.

வழக்காளி
முத்துவேலழகன்,
ஆட்காட்டிவெளி,
அடம்பன்.

-எதிர்-

01.திரு.ஜோசப்.அழகரெட்ணம்,
02.திருமதி.ஜோசப் அழகரெட்ணம்
ஆட்காட்டிவெளி,
அடம்பன்.
எதிராளிகள்.

## இடைக்காலத் தீர்வை

இந்த 2005 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 27ஆம் நாள் இம்மன்றில் நீதியாளர் திரு.சி.கோவலன் அவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்ட ஒருமுகத் தீர்ப்பின் பிரகாரம் வழக்காளியின் சாட்சியத் தின் அடிப்படையிலும் வ.1என்ற ஆவணத்தின் பிரகாரமும் பிணக்கிற்குரிய ஆதனம் வழக்காளியினுடையது என்பதாலும் இவ் வழக்கில் எதிராளிகளுக்கு உரிய முறையில் அழைப்புக்கட்டளைகள் சேர்பிக்கப்பட்டும் அவர்கள் எவ்விதமான மறுப்புரிமைக்கோரிக்கைகளையும் முன் வைக்காமையினாலும் குறித்த ஆதனத்திற்குள்ளிருந்து அகற்றக் கூடியதை அகற்றிக்கொண்டு 3 மாத காலத்திற்குள் வெளியேற வேண்டுமென இடைக்காலத்தீர்வை பதியப்படுகின்றது.

வரைந்தவர்,
திரு.இரா.சரவணபவாநந்தன்,
வழக்காளியின்
சட்டத்தரணி.

(ஒப்பம்:-சி.கோவலன்)
நீதியாளர்.
தமிழீழமாவட்ட நீதிமன்று,
மன்னார்.

(சி.11895)

தமிழீழ மாவட்டநீதிமன்று :-மன்னார்
வழ/இல:-28/05
தன்மை :- காணி.

வழக்காளி
முத்துவேலழகன்,
ஆட்காட்டிவெளி,
அடம்பன்.

-எதிர்-

01.திரு.ஜோசப்.அழகரெட்ணம்,
02.திருமதி.ஜோசப் அழகரெட்ணம்
ஆட்காட்டிவெளி,
அடம்பன்.
எதிராளிகள்.

## பகிரங்க அறிவித்தல்

மேலேபெயர் முகவரியிடப்பட்ட எதிராளிகளுக்கு!

மேற்படி வழக்கு எதிராளிகளாகிய உங்களுக்கெதிராக வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்ட போது நீங்கள் உரியமுறையில் அழைப்புக் கட்டளையை பெற்றிருந்தும் மன்றுக்கு சமுகம் கொடுக்காமையினால் ஒரு முக விளக்கம் மேற்கொள்ளப்பட்டு 27.04.2005அன்று மன்று வழங்கிய ஒரு முகத்தீர்ப்பின் படியான இடைக்காலத்தீர்வை இவ்அறிவித்தலுடன் உங்களுக்கு பகிரங்கப்படுத்தப்படுகின்றது. எனவே இவ் அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் இவ் இடைக்காலத்தீர்வை முற்றான தீர்வையாக மாற்றமுடியாத நிலையிருப்பின் உரியமுறைப்படி மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். தவறின் இடைக்காலத்தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென்பதையும் இவ் அறிவித்த லூடாக வெளிப்படுத்துகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

(ஒப்பம்:-திருமதி ந. தேவதாஸ்)
பதிவாளர்,
தமிழீழமாவட்ட நீதிமன்று,
மன்னார்.

வரைந்தவர்,
இரா.சரவணபவாநந்தன்,
வழக்காளியின் சட்டத்தரணி.

(சி.11896)

## துயர் பகிர்வோம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை அலுவலர் திரு. வி. சிவபாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புத்தாயாரான

### திருமதி விஸ்வலிங்கம் -பார்வதிப்பிள்ளை

அவர்கள் 06. 05. 2005 அன்று மீசாலையில் காலமாகிய செய்திகேட்டு அவரது பிரிவால் துயருறும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கும்,அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்.

(சி.11893)


## விற்பனைப்பிரதிநிதி தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கான விற்பனைப் பிரதிநிதி ஒருவரும், உதவியாளர் ஒருவரும் தேவை.

- தகைமை:-க.பொ.த(சா/த) தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கில அறிவு ஓரளவு இருத்தல் வேண்டும்.
- வயது -18-30 வரை. பால் - ஆண்

நேர்முகத்தேர்வு 20-05-2005 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கீழ்காணும் முகவரிக்கு வருகை தரவும்.

தும்பிக்கையான் களஞ்சியம்,
இல-117,யாழ்சாலை, கிளிநொச்சி.


## புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் கால நீடிப்பு

கொழும்பு லங்கா புத்தகசாலையின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினர் மே 07 முதல் நடாத்திவரும் புத்தகக் கண்காட்சி மலிவு விற்பனை, பலரது வேண்டுகோளுக்கிணங்க மேமாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப் பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் சந்தர்ப்பத்தை தவறவிடாது உங்களது புத்தகத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளுமாறு அனைவரும் வேண்டப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு
தலைவர்,
வணிகமாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி.11968)

## நெஞ்சைவிட்டகலாத ஓராண்டு நினைவினிலே...

### செல்வி. யோகேஸ்வரி தனுக்கோடி

திதி 16.05.2005

**மண்ணக மலர்வு**

04.12.1975

**விண்ணக விரைவு**

26.05.2004



கடமையை சிரமேற்று
சிறப்புடன் வாழ்ந்து
ஒளியாக நீயிருப்பாய் -என்றிருக்க
கொடிய காலன் பறித்தானே

அழியாத புன்னகையுடன் வதனம்
எமை விட்டு அகன்றிடுமா
அணையாத தீபமாக -விண்ணக
வாழ்வின் விடியலாக
பிரகாசிக்க இறைவனை இறைஞ்சி-உன்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-
அம்மா,சகோதரர்கள்,
அத்தான்மார், அண்ணிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

(6137)

## நியாப்- II முல்லைத்தீவு மாவட்டம்

கீழ்வரும் அட்டவணைப்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப்-IIதிட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மையக்கிராமங்களில் கிராமத்திற்கான பங்கேற்பு கிராமிய கணிப்பீடு (PRA), பங்கேற்பு தேவைகள் மதிப்பீடு (PNA) கூட்டங்கள் நடைபெறவுள்ளதால் தயவு செய்து இம் மையக்கிராமங்களின் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல கிராமிய மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் காலை 9.00 மணிக்கு அந்தந்த மையக்கிராமங்களில் சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். அரச உத்தியோகத்தர்களில் சமுதாய உதவிக்குழுவில் (CST/TST) நியமனம் பெற்ற அனைவரையும் இத்தினங்களில் சமுகமளிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| இல. | மையக்கிராமம் | திகதி |
|---|---|---|
| 01 | சிவநகர் | 16.05.2005 |
| 02 | சின்னச்சாளம்பன் | 17.05.2005 |
| 03 | பெரிய இத்திமடு | 18.05.2005 |
| 04 | தண்டுவான் | 19.05.2005 |
| 05 | பழம்பாசி | 20.05.2005 |
| 06 | தேவிபுரம் | 21.05.2005 |
| 07 | இளங்கோபுரம் | 25.05.2005 |

| இல. | மையக்கிராமம் | திகதி |
|---|---|---|
| 08 | இரணைப்பாலை | 26.05.2005 |
| 09 | மந்துவில் | 27.05.2005 |
| 10 | ஆறுமுகத்தாகுளம் | 28.05.2005 |
| 11 | முறிப்பு | 30.05.2005 |
| 12 | புதரிகுடா | 31.05.2005 |
| 13 | முள்ளியவளை கிழக்கு | 01.06.2005 |

எந்திரி ச.சு.சிவகுமார்,
பிரதித் திட்டப் பணிப்பாளர்,
நியாப்-முல்லைத்தீவு

(சி-11959)

# இராணுவம்-தீவிரவாதிகள் பரஸ்பரம் மோதல்
# உஸ்பெகிஸ்தானில் 500 பேர் உயிரிழப்பு

(அந்திஜான்)

**உஸ்பெகிஸ்தானில் கலவரக்காரர்களை அடக்க இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் 500 பேர் பலியாகியுள்ளனர், பலர் காயமடைந்துள்ளனர்.**

முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளில் ஒன்றான உஸ்பெகிஸ்தானில் அதிபர் இஸ்லாம் தரிமோவுக்கு எதிராக தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறார்கள்.

தீவிரவாதிகள் ஏற்கனவே அந்திஜான் நகரிலுள்ள சிறைச்சாலையை உடைத்து 2000 இற்கும் மேற்பட்ட கைதிகளை விடுவித்தனர். பத்திற்கும் மேற்பட்ட சிறை அதிகாரிகளையும் பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

அங்குள்ள சில அரச கட்டடங்களையும், தீவிரவாதிகள் தங்கள் வசப்படுத்தினார்கள். தீவிரவாதிகளிடமிருந்து அரச அலுவலகங்களையும், அதிகாரிகளையும் மீட்க இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் 50 பேர் பலியானார்கள்.

இந்த நிலையில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக அரச எதிர்ப்பாளர்களும் சேர்ந்து கொண்டனர். அரச எதிர்ப்புப் போராட்டங்கள் ஏனைய நகரங்களுக்கும் பரவியது.

இராணுவத்திற்கும் கலவரக்காரர்களுக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது. இந்த துப்பாக்கிச் சண்டையில் பலியானவர்களின் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை பேச்சுவார்த்தை நடத்த வரும்படி அரசு விடுத்த கோரிக்கையை கலவரக்காரர்கள் ஏற்கவில்லை. அதிபர் ராஜினாமா செய்யும் வரை ஓய மாட்டோம் என்று கலவரக்காரர்கள் அறிவித்துள்ளனர்.



உஸ்பெகிஸ்தான் இராணுவ வீரர் ஒருவர் வீதித்தடையை ஏற்படுத்தி காவல் நிற்பதையும், சனக்கூட்டத்திற்கு நடுவில் தீவிரவாதி ஒருவர் எச்சரிக்கையாக நிற்பதையும் காணலாம்.



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நடக்கவுள்ள உலக அழகிப் போட்டியில் பங்கேற்க வந்த அழகிகள், அந்நாட்டின் பாரம்பரிய உடை அணிந்து காணப்படுகின்றனர்.

## சட்ட விரோதமாக ஈரானுக்குள் ஊடுருவிய 123 பாகிஸ்தானியர் நாடு கடத்தப்பட்டனர்

ஈரானுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவிய 123 பாகிஸ்தானியர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

உரிய பயண ஆவணங்கள் இல்லாமல் ஈரானில் இருந்து துருக்கி நாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.


பின்னர் ஈரான்-பாகிஸ்தான் எல்லையிலுள்ள த.ஃப்தான் நகரில் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் அவர்கள் வெள்ளிக்கிழமை ஒப்படைக்கப்பட்டனர். நல்ல வேலை தேடி மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஈரான், துருக்கி வழியாக பலர் சட்டவிரோதமாகச் செல்வது வழக்கம். அவர்கள் பல முறை கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்று சட்டவிரோதமாக ஈரானுக்குள் ஊடுருவிய 7000 பாகிஸ்தானியர்கள் கடந்த ஆண்டில் நாடு கடத்தப்பட்டனர்.

## ஈராக்கில் தீவிரவாதிகள் நிலைமீது விமானத் தாக்குதல்
## அமெரிக்கப் படையினர் உட்பட நூறுபேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கப் படைகள் மேற்கொண்டுள்ள விமானத் தாக்குதலில் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் சதாம் ஆதரவு கெரில்லாக்கள் கார்க்குண்டு வெடிப்புத் தாக்குதலை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். எனவே, இவர்களை ஒடுக்க அமெரிக்கப் படையினர் சிரியா நாட்டு எல்லையை ஒட்டிய பகுதியான அன்பர் நகரில் விமானத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் 91 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளின் பதிலடித் தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் ஒன்பது பேர் பலியாயினர்.



தீவிரவாதிகளுக்கு சிரியா புகலிடம் கொடுத்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை சிரியா மறுத்துள்ளது.

## சீனாவில் குடும்பத்திற்கு ஒரு குழந்தை
## இளைய தலைமுறை தனிமையில்

சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை மட்டுமே என்ற விதி காரணமாக, உடன் பிறந்தவர்கள் யாருமில்லாமல் இளைய தலைமுறையினரை தனிமை வாட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் இது தெரியவந்துள்ளது. இதில் ஏழாயிரம் பேர் பங்கேற்றனர்.

1980 களில் பிறந்த இவர்களில் 46 சதவீதம் பேர், திருமணத்திற்குப் பிறகு இரு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவே விரும்புகிறோம் எனத் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த 1970 களிலிருந்து 'ஒரு தம்பதிக்கு ஒரு குழந்தை' விதி பின்பற்றப்படுகிறது. இந்த விதி இல்லையென்றால், இன்றைய நிலையில் மக்கள் தொகை 30 கோடி அதிகரித்திருக்கும் என்கின்றனர் அதிகாரிகள்.

இந்த விதி காரணமாக, 1970,1980 களில் நகர்ப்புறங்களில் பிறந்தவர்களுக்கு சகோதரனோ, சகோதரியோ கிடையாது. ஆனால் அதேசமயம் பெற்றோர், தாத்தா, பாட்டியின் முழுப் பாசத்தையும் பெற்றிருக்கிறார்கள். பொருளாதார வளமும் அதிகரித்திருக்கிறது. 78 சதவீதத்தினர், தங்களுக்கு சிறந்த கல்வி கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

என்றாலும் கூட தாங்கள் தனிமையாக, சுயநலத்துடன் இருப்பதை 58 சதவீத இளம் வயதினர் ஒப்புக்கொண்டுள்ளனர். சந்தோஷத்தையோ வருத்தத்தையோ பகிர்ந்து கொள்ள சகோதரர்கள்-சகோதரிகள் இல்லாமலிருப்பது ஏமாற்றமளிப்பதாக 66 சதவீதத்தினா ஒப்புக்கொண்டுள்ளனர்.

குடும்பத்தினர், நண்பர்கள், காதலர்களுடனான பாச உணர்ச்சி இல்லாமல் இருந்தால், வாழ்க்கை முழுமையடையவில்லை என்றுதான கருத முடியும் என்கிறார் சமூகவியல் பேராசிரியர் ஒருவர். ஆனால இதற்காக இளைய தலைமுறையினரைக் குற்றம்சாட்ட முடியாது. சமூகத்தின் நிலை அப்படி எனவும் கூறுகிறார் அவர்.

## கொலம்பியாவில் 12 தொன் போதைப்பொருள் கண்டுபிடிப்பு

கொலம்பியாவில் 12 தொன் எடையுள்ள போதைப் பொருளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கொலம்பியாவில் இருந்து அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளுக்குப் போதைப்பொருள் கடத்தப்படுகிறது. இதனைத் தடுக்க போதைப் பொருள் கடத்தல் தடுப்பு படையினர் தீவிர வேட்டை நடத்தி ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான கோடி மதிப்புள்ள போதைப் பொருட்களை கைப்பற்றி வருகின்றனர்.

சமீபத்தில் அங்குள்ள பசுபிக் கடல்பகுதியில் இருக்கும் துறை முக நகரமான துமாகோ நகரைச் சுற்றியுள்ள பகுதியில் சோதனை நடந்தது. அப்போது மீரா நதிக்கரையில் 12 தொன் எடையுள்ள போதைப்பொருள் சிக்கியது. இதன் மதிப்பு ரூபா 3000 கோடி என்று கூறப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இது போன்று மிகப்பெரிய தொகைக்கு போதைப்பொருள் சிக்கியதில்லை என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## போக்குவரத்து ஊழியர்கள் வேலைநிறுத்தம்
## இத்தாலியில் பயணிகள் அசௌகரியம்

(ரோம்)

சம்பள உயர்வு கேட்டுஇத்தாலியில் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் பயணிகள் பெரும்அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் நாடு முழுவதும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், விமான நிலைய ராடார் இயக்குநர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் 211 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. வெளிநாட்டு விமானங்களும் நிறுத்தப்பட்டன. இம்மாத இறுதியில் அடுத்த கட்ட வேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

## சீனாவில் ஐந்துபேர் பலி

சீனாவின் மேற்கு பகுதியிலுள்ள உரும்யு நகரிலுள்ள மின்சார உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்துபேர் உயிரிழந்துள்ளனர். அங்குள்ள எண்ணெய் சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட தீயே பாரிய தீவிபத்தாக மாறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவேன்
## பங்களாதேஷ் பிரதமர் எச்சரிக்கை

(டாக்கா)

நாடாளுமன்ற கூட்டங்களில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும், தொகுதிப்பிரச்சினைகளைப் பேச வேண்டும், விவாதங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும், அரசு கொறடா பிறப்பிக்கும் கட்டளைகளைக் கவனித்துச் செயற்பட வேண்டும் இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தையே கலைத்து விடுவேன் என்று வங்கதேசப் பிரதமர் காலிதா ஜியா எச்சரித்துள்ளார்.

ஆளும் வங்கதேச தேசியவாத கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் வெள்ளிக்கிழமை பேசுகையில் இந்த எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

300 உறுப்பினர்களைக் கொண்ட வங்கதேச நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு 180- இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். 2007 இல் தான் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். சமீபத்தில் நடந்த டாக்கா மேயர் தேர்தலில் ஆளும் கட்சியின் அமைச்சரே வேட்பாளராகப் போட்டியிட்டுப் பிரதான எதிர்க்கட்சியின் வேட்பாளரிடம் தோற்றார். அவர் மூன்றாவது முறையாகத் தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவைக்கு வராமல் தங்களுடைய சொந்த வேலையாக அங்கும்,இங்கும் அலைவதால் முக்கிய நேரங்களில் அவையில் இருப்பதில்லை, இதை மனதில் வைத்தே பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.



# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறையால் நெருக்கடி!

## -சிகிச்சைக்காக வரும் நோயாளர் அவலம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை ஊழியர்கள் முதல் நோயாளர்வரை தினம் தினம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.**


வெளியிலும் வரிசையில் காத்திருப்பு

தற்போது வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையின் காரணமாக நோயாளர்கள் வெளிநோயாளர் பகுதிக்கு வெளியேயும் எறிக்கும் வெயிலிலும் வரிசையில் காத்துநின்று மருந்துகளைப் பெற்றுச் செல்லும் நிலையினை நேரில் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் கடந்த சிலவாரங்களாகத் தினமும் 860இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதனை வைத்தியசாலைக் குறிப்பேட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

வைத்தியசாலையில் நாற்பது வைத்தியர்களும், எழுபதிற்கு மேற்பட்ட தாதியர்களும், பன்னிரண்டு மருத்துவ மாதர்களும் கடமைபுரிய வேண்டிய நிலையில் தற்போது ஏழு மருத்துவர்களும், மூன்று மருத்துவ நிபுணர்களும், பதினைந்து தாதியர்களுமே கடமைபுரிந்து வருகின்றனர் எனவும், இதேபோன்று மற்றும் சகலதர ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையின் காரணமாக நோயாளர்கள் மாத்திரமன்றி வைத்தியசாலையில் தற்போதுள்ள குறைந்தளவிலான ஊழியர்களும் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதென கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி இ.சதானந்தன் தெரிவித்துள்ளார். வைத்தியசாலை நிலைகுறித்து வினாவியபோது அவர் இதனைத் தெரிவித்தார். (சோ)

## விளையாட்டு விழா

முழங்காவில் பிரதேசத்தில் இரணைமாதா நகரில் அமைந்துள்ள சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பூங்கா மைதானத்தில் இடம்பெறவுள்ளது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் லண்டன் கிளையின் அனுசரணையுடன ஊரக வளர்ச்சி பணி இப்பூங்காவினை நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவீதி விபத்துக்களைத் தடுக்க காவல்துறையினர் தீவிர முயற்சி

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச தமிழீழ காவல்துறையினரால் வீதி ஒழுங்கு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் சிறுசிறு வீதிவிபத்துக்களையடுத்து மேற்படி நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வீதியில் இருவர் அருகருகாக ஈருருளிகளிலும், உந்துருளிகளிலும் செல்வதற்கு குற்றப்பணம் அறவிடுவதுடன், தேவையின்றி வர்த்தக நிலையங்களின் முன்பாகவும், பிரதான வீதிச் சந்திகளிலும் நின்று வீதியால் செல்வோருக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மீதும் சட்ட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பாடசாலை நேரங்களில் பாடசாலை வீதிகளில் காவல்துறையினர் வீதியில் கடமையில் ஈடுபட்டுவருவதால் வீதிவிபத்து தவிர்க்கப்பட்டு வருகின்றமை அவதானிக்க முடிகின்றது. மேற்படி நடவடிக்கைகளைப் பிரதேச காவல்துறை அதிகாரி சிவலிங்கம் நெறிப்படுத்தி வருகின்றார். (ஆ)

## யு.என்.டி.பி. நிதியுதவியுடன் பூநகரியில் சிறுவர் பூங்கா

(பூநகரி)

பூநகரி நான்காம் கட்டையில் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் சிறுவர்பூங்கா அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கென யு.என்.டி.பி மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை சன சமூக நிலைய நிர்வாகத்திடம் வழங்கியுள்ளது. இவ்வேலைத்திட்டத்தில் அறுபது வீத் வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன என சனசமூக நிலையத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (34)

## கல்மடு நகர் சம்புக்குளம் பகுதியில் புதிதாக மூலிகைத்தோட்டம் அமைப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சம்புக்குளம் பகுதியில் புதிதாக மூலிகைத்தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கண்டாவளைப் பிரதேசசெயலர் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை ஒன்பது மணி அளவில் ஆரம்பமாகிய நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகமும், விசுவமடுப்பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சோழநிலவனும், தேசியக்கொடியினை வட்டக்கச்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் சுடரும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட மூலிகைத்தோட்டம் பற்றியும், அதன் செயற்பாடுபற்றியும் விரிவான கருத்துரைகளையும் விளக்கங்களையும் கிளி.மாவட்ட அரச அதிபரும், வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளரும் வழங்கினர். இந்நிகழ்விற்குப் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டனர். (12)

## முன்பள்ளி கல்வி அபிவிருத்திக்காக புதுக்குடியிருப்பில் கலந்துரையாடல்

முல்லைக் கல்வி வலய புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளிச் சிறார்களினது கல்வி வளர்ச்சி தொடர்பாகவும், முன்பள்ளிகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது

புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் செல்வி. ஜெயசீலி தலைமையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மண்டபத்தில் காலை பத்து மணியளவில் அகவணக்கத்துடன் இக்கலந்துரையாடல் ஆரம்பமாகியது. முன்பள்ளிச்சிறார்களின் கல்வி வளர்ச்சியிலும், முன்பள்ளிகளின் பராமரிப்புக்களிலும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களினதும், இணைப்பாளர்களினதும் பங்களிப்புக்கள் எவ்வாறு அமையப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது பற்றி இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டன.சிறார்களின கல்வி,சுகாதாரம், போசாக்கு மற்றும் முன்பள்ளிகளையும், அவற்றில் கல்வி பயிலும் சிறார்களையும் எவ்வாறு பேணிப் பராமரித்து நிர்வகிக்கப்பட வேண்டுமென்ற கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆக்கபூர்வமாக நிறைவுபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன், தமிழர் புனர்வாழ்வுக்கழக கல்வி அபிவிருத்திப் பிரிவு இயக்குநர் இராசகோபால், புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளிகளின் தலைவர், செயலாளர், பிரதேச மட்டத்திலான முன்பள்ளிக் கட்டமைப்பு நிர்வாக உறுப்பினர்கள், முதன்மை ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிச்சிறார்களினது பெற்றோர்கள், நிறுவனங்களின் சமூகநலத்திட்ட இணைப்பாளர்கள், வலய இணைப்பாளர்களெனப் பலர் கலந்துகொண்டனர்.

## களவாடப்பட்ட உந்துருளி காவல்துறையினரால் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் முரசுமோட்டைப்பகுதியில் களவாடப்பட்ட உந்துருளி ஒன்றினை தமிழீழ காவல்துறையினர் மீட்டுள்ளனர். கடந்த ஏழாம் திகதி இந்த உந்துருளி திருடப்பட்டு இருந்தது. இதனை அடுத்து காவல்துறையினர் பொதுமக்களின் உதவியுடன் உந்துருளியை மீட்டுள்ளனர். களவாடியவர்கள் 11ஆம் திகதி உந்துருளியுடன் நின்றபோது காவல்துறையினர் முற்றுகையிட உந்துருளியை விட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

இவ் உந்துருளியை நீதிமன்றத்தின் ஊடாக உரியமுறையில் உரித்துடையவரிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. (கு)

## பா.உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட வவுனியா தெற்கு வலயத்திலுள்ள முன்பள்ளிகளின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரால் வழங்க[illegible]ட்ட ரூபா ஒருலட்சத்து ஐம்[illegible]ம் நிதியின் மூலம் கொள்வனவு[illegible]யப்பட்ட முன்பள்ளிகளுக்கான [illegible]டங்கள் வழங்கும் நிகழ்வு இட[illegible]ற்றுள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதி காலை பத்து மணியளவில் சித்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், விநோ நோகராதலிங்கம் ஆகியோரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி மற்றும் பிரதேச, வலய மாவட்ட முன்பள்ளி கூட்டமைப்பு உறுப்பினர்கள், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், கிராமஅமைப்புக்கள் முன்பள்ளி ஆசிரியர்கள், இணைப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரால் ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான அலுமாரிகள்-16, கதிரைகள் 15 என்பன பிரதேசக் கட்டமைப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

## -ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற- அழகக சங்க உறுப்பினர்களுக்கு த.புனர்வாழ்வுக்கழகம் உதவி

(முள்ளியவளை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அழகக சங்கத்தினருக்குத் தொழில் உபகரணக் கொள்வனவுக்காக உதவி வழங்கப்பட்டுள்ளதென முல்லைப் பிரதேச அழகக சங்கத் தலைவர் காண்டீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சுனாமி கடல் அனர்த்தத்தின்போது பாதிப்புக்குள்ளாகி மீளவும் தமது தொழிலை நடைமுறைப்படுத்த முடியாதுள்ள எமது சங்கத்தைச் சார்ந்த 16 பேருக்கு ஒவ்வொருவருக்கும் தலா 10000 ரூபா வீதம் தொழில் உபகரணக் கொள்வனவுக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லைத்தீவு மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தியின் ஒழுங்குபடுத்தலில் வழங்கப்பட்டு உபகரணக் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (ஆ)

## பயிற்சி வகுப்பு

(புதுக்குடியிருப்பு)

சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் மலேரியா தடுப்புப் பயிற்சி வகுப்பு கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை.மாவட்ட செயலகத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

சர்வோதய முல்லை.மாவட்ட இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் டாக்டர் சந்திரதாசா, சுகாதாரத்திட்டப் பணிப்பாளர், [illegible]மாவட்ட சர்வோதய இணைப்[illegible]பிரமணியம் ஆகியோரும் க[illegible]ண்டனர்.

## வன்னிதொழில்நுட்ப நிறுவகத்தின் கணினி தொழில்நுட்பக் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரிலுள்ள வன்னி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரின் கணினி தொழில் நுட்பக் கண்காட்சி எதிர்வரும் 18ஆம்,19ஆம்,20ஆம் திகதிகளில் நிறுவகத்தில் நடாத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட மூன்று தினங்களிலும் காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரையும், பிற்பகல் 1.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரையும் மேற்படி கண்காட்சி நடைபெறவுள்ளது. வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தால் "வன்னிவிசன் 05" என்னும் பெயரில் இரண்டாவது தடவையாக மேற்படி கண்காட்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தில் 12 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து மாற்றலாகிச்சென்ற கிராமசேவை அலுவலர் சு.பசுபதிப்பிள்ளை கனகபுரம் மக்களால் நேற்று முன்தினம் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவில் கௌரவிக்கப்பெற்றார். (படம்-சோதி)




**05.05.2005 - 11.05.2005**

05

* பிரிட்டனில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மூன்றாவது முறையாகவும் ரொனிபிளேயர் பிரதமர் பதவியைப் பெற்றார்.



* ஈராக்கின் நான்கு இடங்களில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஒன்பது பொலிசார் உட்பட 25பேர் பலி.

* இந்தியாவின் முழுத்தயாரிப்பில் உருவான இரு செயற்கைக் கோள்களைத் தாங்கிய பீ.எஸ்.எல்.வி.சி.6 என்ற உந்துகணை மூலம் செலுத்தப்பட்டது.




* மத்திய கொங்கோவில் பயணிகள் விமானமான அன்டனோவ் விபத்துக்குள்ளானதில் பத்துப் பேர் பலி

*பிலிப்பைன்ஸ் இராணுவ உலங்கு வானூர்தியொன்று மலையில்மோதி விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒன்பதுபேர் பலி.

*தென்மேற்கு நைஜீரியாவில் உழவு இயந்திரம் பேருந்து ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 29பேர் பலி.

06

* ஈராக்கின் ரிக்றித் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஏழு ஈராக்கியப் பொலிசார் பலி;எட்டுப்பேர் காயம்.



*தமிழ்நாடு அரக்கோணத்தில் இந்திய கடற்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியொன்று விபத்துக்குள்ளானதில் மூன்று இந்தியக் கடற்படைவீரர்கள் பலி.

07

* நேபாளத்தைச் சேர்ந்த விஸ்வஇந்து பிரிவுத்தலைவர் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து 300 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பூட்லால் நகரில் வைத்துச் சுட்டுக் கொலை.

*ஈராக் தலைநகர் பாக்தாக்திற்கு அண்மையில் நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 17பேர் பலி.



*பெருநாட்டின் பின்தங்கிய பிரதேசமான தென்அன்தெஸ்ஸின் மலைப்பாதையில் பயணிகள் பேருந்து ஒன்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பொதுமக்கள் பலி, 18பேர் காயம்.

*தென் அவுஸ்திரேலியாவின் பயணிகளை ஏற்றிச்சென்ற ''பயர்சயில்மெட்ரோவினர்'' எனப்படும் விமானம் தென் குவின்லாந்தில் இருந்து பமாகா எனும் இடத்திற்குச் செல்லும் வழியில் விபத்துக்குள்ளானதில் 18 பயணிகள் பலி.

*ஆப்கானின் தலைநகர் காபூலிலுள்ள இணையத்தளம் ஒன்று தற்கொலைக் குண்டுதாரி தாக்குதலுக்குள்ளானதில் மூவர் பலி.

08

* ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இருந்து ஐம்பது கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் சுவாய்ரா ரிக்றித், தாக்கிர்சதுக்கம் ஆகிய மூன்று இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நான்கு அமெரிக்கர் உட்பட 56பேர் பலி.



* இரண்டாம் உலகப்போரின்போது நாசிப்படைகள் வெற்றிகொள்ளப்பட்டதன் 60ஆவது ஆண்டு நினைவுதினம் ரஷ்யாவின் செஞ்சதுக்கத்தில் இடம்பெற்றது.



*பலஸ்தீன சனாதிபதி மஹமூத் அப்பாஸ் மூன்றுநாள் விஜயம் ஒன்றைமேற் கொண்டு ஜப்பான்சென்றார்.

*மியான்மார் தலைநகர் ரங்கூன் உட்பட மூன்று இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 11பேர் பலி, 62 பேர் காயம்.

09.

* தென் பாக்தாத்தில் பொலிஸ்சோதனைச் சாவடிக்கருகில் கார்க்குண்டொன்று வெடித்ததில் மூன்று பேர்பலி, எட்டுப்பேர் காயம்.

*ரஷ்ய சனாதிபதி விளாடிமிர்புட்டினை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ரஷ்யத்தலைநகர் மொஸ்கோவிலுள்ள கிரம்ளின் மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

ஈராக்கின் புதிய அமைச்சரவையின் சிரேஷ்ட அதிகாரி சோபாயாஸ் துப்பாக்கித்தாரி ஒருவரால் சுட்டுக்கொலை.

*நேபாளத்தில் இராணுவமுகாம் ஒன்றின் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய கெரில்லாத்தாக்குதலில் 36 பேர் பலி.

10

* மத்திய வியட்நாமில் வெடிபொருட்களை ஏற்றிவந்த உழவு இயந்திரம் ஒன்று பயணிகள் பேருந்துடன் மோதிவிபத்துக்குள்ளானதில் 10 பேர் பலி.

*சீனாவில் ஹெனான் மாகாணத்திலுள்ள பேபெங் எனுமிடத்தில் டைனமற் வெடித்ததில் 14பேர் பலி.

*இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவுப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் ரிக்டர் அளவுகோலில் 6.6புள்ளியாகப் பதிவானது.

*பாத்தாத்தின் மையப்பகுதியில் கார்க்குண்டு வெடித்ததில் 8பேர் பலி, 16பேர் காயம்.

11


* ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் பல பகுதிகளிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களிலும். ஏனைய குண்டுவெடிப்புகளிலும் 90இற்கும் அதிகமானோர் பலி, நூற்றுக்கும் அதிகமானோர் காயம்.



## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் கணனிக் கல்வி நிலையம் திறந்துவைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் கணனிக் கல்வி நிலையம் நேற்றுக் காலை பத்து மணியளவில் தாமோதரம்பிள்ளை வீதியில் தொடங்கி நிகழ்வுகள் நடைபெற்றன. பொதுச் சுடரினை தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர், சாவகச்சேரி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். வரன் ஏற்றி வைத்தார் மங்கல விளக்கினை சற்குணமும், கணனி மையத்திற் கான பெயர்பலகை திரைநீக்கத்தைத் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் அருந்தவபாலனும், கணனிக் கூடத்தை




வைக்கப்பட்டது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விஜயரூபன் தலைமையில் தேசியக் கொடியினை தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ் பேராசிரியர் கந்தசாமியும் தொடக்கி வைத்தனர். சிறப்புரையினை தமிழீழ.விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா நிகழ்த்தினார். (28)

## சந்திவெளியில் படையினர் வெறித்தனத்திற்கெதிராக தென்மராட்சி மாணவர் கறுப்புப்பட்டி அணிந்து போராட்டம்

மட்டக்களப்பு சந்திவெளிச் சந்தியில் சிறிலங்காப்படைகளின் தடைமுகாமை அகற்றக்கோரி அமைதி வழியில் போராடிய பொது மக்கள்மீதும், மாணவர்கள்மீதும் சிறிலங்காப்படைகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து இன்று தென்மராட்சியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம் நடத்தவுள்ளனர்.

காலை பத்து மணி தொடக்கம் 10.30 மணிவரை கறுப்புபட்டி அணிந்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தென்மராட்சிப் பாடசாலை மாணவர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஓவ்வொரு பாடசாலைகளுக்கு முன்னாலும் மாணவர்கள் கூடிநின்று அரைமணித்தியாலம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## நூல் நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் புதிய நூல் நிலையம் திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றது.

ஜெ.66 கிராமஅலுவலர் சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் குணராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய நூல் நிலையத்தைத் திறந்து வைத்ததுடன், புதிய நூலகத்திற்கான ஒரு 'தொகுதி நூலையும் ஈச்சமோட்டை மாதர் அபிவிருத்தி சங்கத்தலைவியிடம் வழங்கினார். திறப்பு விழாவில் உரைநிகழ்த்திய கிராமஅலுவலர் இளைஞர் சமுதாயமும், மாணவர் சமு தாயமும் தேசியப்பாதையில் செல்ல இந்த நூல்நிலையம் வழிகாட்டும் என்றும் கூறியுள்ளார். (28)




## படையினர் மண் அணைகளால் கழிவுநீர் அகற்றப்படாது தேக்கம்

(தென்மராட்சி)

பாசையூர் பாடசாலைக்குப் பின்னால் கடற்கரை ஓரங்களில் படையினர் அமைந்துள்ள மண் தடை அணைகளால், கடலுக்குச் செல்ல வேண்டிய கழிவு நீர் வெளியேற்ற முடியாத சூழல் தொடர்கின்றது.

இதனால் தேங்கியுள்ள கழிவு நீரால் இப்பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்றுநோய்களும் ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பதாகவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே படையினர் மக்களின் இயல்பு வாழ்வுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் கடற்கரை ஓரங்களில் அமைக்கப்பட்டுள்ள மண் அணைகளை உடன் அகற்ற வேண்டும் என்று பாசையூர் பிரதேச அபிவிருத்திக்குழு கோரியுள்ளது.

# கொள்கையற்றவர்களால் சாபக்கேடு!

இன்றும், நாளையும் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு, நாட்டிலுள்ள அணைவரினாலும் அரசியல், பொருளாதார வகையில் உற்று நோக்கப்படும் ஒரு விடயமாக உருவாகியுள்ளது. வருடாந்தம் பரிஸில் நடக்க வேண்டிய இம்மாநாடு தற்போது சிறிலங்காவின் கண்டி மாநகரில் நடைபெறுவதற்குக் காரணம் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தமாகும். எவ்வாறாயினும் இதனைச் சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கம் பெற்றுக்கொள்ள அதன் பொருளாதாரக் கொள்கைகளையும், நிதியைப் பயன்டுத்தும் உபாயங்களையும் இச்சந்தர்ப்பத்தில் விளக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளது.

கடந்த வருடங்களிலும் வெளிநாடுகள் பல உதவிகளை வழங்குவதாக உறுதியளித்த போதும் அந்நிதியில் மிகக் குறைவான தொகையே வழங்கப்பட்டது என்று கூறுவதை விட அரசாங்கம் பெற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது என்றே கூறலாம். காரணம் உறுதியளித்த தொகையை எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளில் அதனைச் செலவிடுவது என்ற சரியான பொருளாதாரத் திட்டத்தையோ, அபிவிருத்தித் திட்டத்தையோ அந்நாடுகளிடம் அரசு சமர்ப்பிக்காமையாகும்.

எனவே, இந்நிதியைச் சம்பந்தப்பட்ட நாடுகள் திரும்பிப் பெற வேண்டிய நிலைக்குள்ளானது. இதற்கு முக்கியமான காரணமாக அரசுக்குள் பிரதான அங்கம் வகிக்கும் ஜே.வி.பி என்ற சிவப்புப் பட்டிக்காரர்களின் அரசியல் அறிவின்மையும், திட்டமிடாத பொருளாதாரக் கொள்கையுமாகும். முக்கியமாக சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றிய நம்பிக்கையான, உறுதியான கொள்கையொன்று அரசாங்கத்திடம் இல்லாமை எனலாம். அத்துடன் அரசாங்கத்தின் பாரிய பொறுப்பான வேலை சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதாகும். இந்த நடவடிக்கையும் மந்தகதியிலேயே தொடர்கின்றன. இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கான பெருமளவு நிதி வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்காகவே வழங்கப்பட்டது. இது சமாதானத்திட்டத்தின் ஒரு மைல்கல்லாகவே கருதப்பட்டது. இந்த மாநாட்டுக்கு முன்பாக விடுதலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா எட்டவிருந்த போதும் அதுவும் சாத்தியமற்றதாகிவிட்டது. சந்திரிகாவைப் போன்று வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஒரே கருத்தைத் தெரிவித்தபோதும் அரசுக்குள் அங்கம்வகிக்கும் இரு பிரதான கட்சிகளிடையே உள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக அது சாத்தியமற்று வருகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக கலந்தாலோசிக்க எதிர்க்கட்சித் தலைவரை சந்திரிகா அணுகிய போது ரணில் விக்கிரமசிங்க அதற்கு மறுப்புத் தெரிவித்துப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இறுதி அறிக்கை தம்மிடம் வழங்கப்படவேண்டும் எனக்கோரினார். அதற்குப் பதிலளித்த சந்திரிகா இது சமாதான நடவடிக்கைகள் தொடர்பானதல்ல என்று தெரிவித்தார். பின்னர் ரணில், சமாதான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பொதுக்கட்டமைப்பு இல்லாது விடில் அது ஒஸ்லோ, டோக்கியோ மாநாடுகளுக்கு அப்பாற்பட்டது என்றும். அது சமஷ்டி தீர்வுக்கான வழியல்ல என்றும், அது சமாதானத்துக்குப்பெரும் ஆபத்தைத் தரும் என்றும் கூறினார்.




வெளிநாட்டு உதவிகள் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட போதும், இந்த மாநாட்டுக்கு முன்பு பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென வெளிநாடுகள் அழுத்தம் தெரிவித்தாலும். இந்த நிதி வழங்கல் அதற்கான ஒரு நிபந்தனையாக இருக்காது என உலக வங்கிப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளமையால் பொதுக் கட்டமைப்பு விவகாரம் சிறிது காலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையின்மை காரணமாக சில வேளைகளில் அவர்களின் நடவடிக்கைகள் சினிமாக் காட்சிகளில் நடைபெறுவது போன்றுள்ளது. உதாரணமாக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே உலகவங்கித் தலைவரின் உரை மீது விஷத்தைக் கக்கும்போது நிதியமைச்சர் அமுனுகமவும், திறைசேரி செயலர் ஜெயசுந்தரவும் அவருடன் கூடிக்கலந்தாலோசனை நடத்துகின்றனர்.

அடுத்த ஆச்சரியம் என்னவென்றால் இந்த விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு பற்றித் தெரிந்து கொள்வதாகும். கடந்த காலங்களில் குறிப்பாகத்தேர்தல்காலத்தில் உலகவங்கிப் பிரதிநிதிகளை, நாட்டைவிட்டு வெளியேறுமாறு கூக்குரலிட்ட ஜே.வி.பி.யினர் இப்போது நடைபெறும் மாநாடு தொடர்பாக என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள், எவ்வாறு நடந்து கொள்வர் என்பதை அறிய மக்கள் விழிகளை அகலத்திறந்துள்ளனர். ஜே.வி.பி சரியான பொருளாதார அரசியல் அறிவு குறைந்தவர்களாக இருக்கும் நிலையில் மாநாடு தொடர்பில் மக்களிடம் தனது ஆதரவாளர்கள் மூலம் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் கபட நாடகத்தை நடத்தி இந்த மாநாட்டைக் குழப்பிவிடுமா, என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது.

எனவே, சந்திரிகா அரசு நாட்டின் நன்மைகருதிச் சரியான முறையில் நடந்துகொள்ள வேண்டும். அண்மையில் அமுனுகமவும் தெற்காசியாவில் சிறிலங்கா ''நோய் வாய்ப்பட்ட நாடாவதை'' ஏற்கமுடியாது என்றும், ஏனைய ஆசிய நாடுகளும் தென்னாசிய நாடுகளும் தாராளப் பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டு நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருப்பதாகவும், இந்நாடு பின்தங்கியிருப்பதை அனுமதிக்கமுடியாது என்றும் தெரிவித்தார். எனினும் இது தொடர்பான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் போது ஜே.வி.பி யினர் தடையாகவே இருக்கின்றனர்.

எனினும் மிக அண்மைக் காலங்களில் ஜே.வி.பி யினர் தமது முன்னைய நிலையிலிருந்து சற்று மாறியிருப்பது அவர்களின் நடவடிக்கைகள் மூலம் தெரிய வருகிறது. அண்மையில் பொதுக் கட்டமைப்புக்கு எதிராக நடைபெற்ற கூட்டமும், முன்னைய கூட்டங்களுடன் ஒப்பிடும் போது வலுவிழந்து காணப்பட்டது. அங்கு காணப்பட்ட சுலோகங்களும் வித்தியாசமானதாக இருந்தன. அவற்றில் ஜே.வி.பியினது அடையாளங்கள் காணப்படவில்லை. பொதுக்கட்டமைப்பை தடைசெய்யக்கோரியது பல்கலைக்கழக பிக்குகள் முன்னணியாகும்.

அத்துடன் மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பான அமைச்சரவை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், அதுவரை பாராளுமன்றத்துக்கு சமூகமளிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் சனாதிபதியின் பதவிக்காலம் எப்போது முடிவுக்கு வருமென எதிர்க்கட்சியான ஐ.தே.க வினர் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் வரும் டிசம்பரில் முடிவுக்கு வருவதால் அவர் சனாதிபதிக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஐ.தே.க வினர் உள்ளனர்.

சனாதிபதி மேலும் ஒருவருடம் பதவியில் இருந்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க ரணில் கிராமிய இளைஞர்களை ஒன்று திரட்டும் முயற்சியிலீடுபட்டுள்ளார்.

அதற்கிடையில் சந்திரிகா நிறைவேற்றதிகார முறையை நீக்கிவிடும் முயற்சிக்கு பிரதான பிக்குகள் இருவர் பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கவும் தயாராக உள்ளனர். சனாதிபதித் தேர்தலில் போட்டியிட சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் வேட்பாளர் ஒருவரை நியமிப்பதிலும் குழப்பநிலையுள்ளது. அதில் அநுராவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் கடும் போட்டி நிலவுகிறது. ராஜபக்ஷ பாரம்பரியக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்தவராதலால் சந்திரிகாவின் கீழ் அவரது செல்வாக்கு உயரும் அத்துடன் தென்பகுதியில் அவருக்கு அதிக ஆதரவு இருப்பதால் அவரே அடுத்த சனாதிபதியாக வரலாம்.

இவ்வாறு சிறிலங்காவின் அரசியலிலும், பொருளாதாரத்திலும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படப் போகின்றதென்பதை கண்டியில் இன்று (திங்கள்) தொடங்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பின்னரே தீர்மானிக்க முடியும்.

**கேசர அபேவர்த்தன**
**(டெய்லி மிரர்)**
**தமிழில் வடிவேல்**

---

## பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகள் இந்தியா எதிர்ப்பதான செய்திக்கு மறுப்பு

இலங்கைத்தீவில் ஆழிப் பேரலை மீளமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பில் சிறிலங்கா அரசுக்கு சமநிலையில் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம் இடம் பெறுவதை இந்தியா எதிர்க்கிறது என்று வெளியான செய்திகளை இந்தியா மறுத்துள்ளது.

சிறிலங்காவிற்கான இந்தியத் தூதரக அதிகாரி நக்மா மாலிக் இதைத் தெரிவித்தார். புதுடில்லியில் இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சியாம் சரனுக்கும், நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்முக்கும் இடையே நடந்த பேச்சுகளின்போது பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவதில் இந்தியா உடன்படுவதாகவும், ஆனால் அதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கைத்தீவில் மேலாதிக்கம் பெறுவதை இந்திய அரசு விரும்பவில்லை என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இச்செய்திகள் அனைத்தும் தவறானவை என்றும் நக்மா மாலிக் கூறினார். சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் இந்தியப் பயணத்திற்குப் பின்பே பொதுக்கட்டமைப்புக் குறித்த தனது நிலையை இந்திய அரசு தெரிவிக்கும் என்றும் இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 375 படையினர் ஹெய்டி பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவில் இருந்து 375 பேரைக்கொண்ட மற்றும் ஒரு படைத்தொகுதியினர் நேற்று முன்தினம் ஹெய்டி நோக்கி புறப்படுகின்றனர். இவர்கள் அங்கு சென்றதும் ஏற்கனவே அங்கு தங்கியுள்ள 375 படையினர் நாடு திரும்பவுள்ளனர். ஹெய்டியில் ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையினராக 750 சிறிலங்காப் படையினர் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலாபமீட்டாத நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க மாட்டோம்

### -நிதி நிறுவனங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

இலாபமீட்டாத நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க முடியாது என நிதிநிறுவனங்கள் அறிவித்துள்ளன. இலங்கை மின்சார சபை ஊழியர்களின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானிய அபிவிருத்தி ஒத்துழைப்பு வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த புதனன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சாரசபை மறுசீரமைக்கப்படாத பட்சத்தில் அதற்கான அனைத்து நிதியுதவிகளையும் தாங்கள் நிறுத்தப்போவதாக இந்த இரு நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளும் கூட்டாக அறிவித்துள்ளனர். தற்போதுள்ள நிலையில் மின்சாரசபையானது இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக செயற்படமுடியாது என்பதை சுட்டிக் காட்டிய அவர்கள் இவ்வாறான நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கமுடியாது என்றும் தெரிவித்தனர். இதேவேளை மின்சார சபை மறுசீரமைப்புத் தொடர்பான அமைச்சரவை அங்கீகாரம் மீளப் பெறப்பட்டுள்ளது. ஜே.வி.பி யின் அழுத்தங்களை அடுத்து இந்த அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(32)

## ஆயுத முனையில் கடத்தல்

கொழும்பு ஜும்மா மஸஜூட் வீதியில் உள்ள முஸ்லிம் பள்ளி வாசலுக்கு முன்னால் வைத்து இளைஞர் ஒருவர் ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் பச்சை நிற நிசான் ரக வாகனத்தில் வந்த ஆயுதம் தரித்த குழுவொன்றே இந்தக் கடத்தல் நடவடிக்கையை நடத்தியுள்ளது.ஆரம்ப விசாரணைகளின் மூலம் கடத்தப்பட்டவர் மொகமட் பசார் எனத் தெரிய வந்துள்ளது.சந்தேக நபர்களைக் கைதுசெய்யும் நோக்கில் விசேட ஒழுங்குகளைப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்..

# 'டெங்கு' நோயிலிருந்து தற்காப்போம்!


**யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

1. இலங்கையில் கடந்த பத்து வருடங்களில் இந் நோய் வேகமாக அதிகரித்து வருகிறது. 1995 ஆம் ஆண்டு 440 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு 11 இறப்புக்கள் சம்பவித்தன. 2000 ஆம் ஆண்டு 5203 நோயாளர்களும், 37 இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

2004 ஆம் ஆண்டு 15434 டெங்கு நோயாளர்களும், 88 பேர் இறந்துமுள்ளனர்.

02. சமீப காலமாக எமது பகுதியில் மழை வீழ்ச்சியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. விட்டு விட்டுப் பெய்யும் மழை டெங்கு நோய் அதிகரிப்புக்கு மிகவும் வாய்ப்பான சூழலை உருவாக்கும். யாழ்.மாவட்டத்திற்கும் டெங்குள்ள மற்றைய மாவட்டங்களுக்கும் போக்குவரத்துத் தொடர்பு கூடுதலாக ஏற்பட்டுள்ளதன் காரணமாகவும் நோய் பரவும் வாய்ப்புண்டு.

03. யாழ்ப்பாணப் பகுதியில் 2004 ஆம் ஆண்டு 153 நோயாளரும் இரண்டு மரணமும்



ஏற்பட்டதாக அறிக்கைகள் காட்டுகின்றன. இந் நோய்க்கானபரிசோதனை வசதிகள் குறைவாக உள்ளமையால் நோய் அறிவித்தல்கள் தனியார் வைத்தியசாலைகளில் இருந்து பெறப்படாமை ஆகிய பிரச்சினைகளை வைத்துப் பார்க்கையில் இந்நோய் நிலைமை பல மடங்கு அதிகமாகவுள்ளது என்பது புலனாகும். இந் நோய் அதிகமாக சிறுவர்களைப் பாதிக்கிறது. டெங்கு ஒரு ஆபே வைரஸ் ஆல் ஏற்படுத்தப்படும் நோய்த் தொகுதியாகும். இதில் (டெங்குக்காய்ச்சல்,டெங்குஇரத்தப்பெருக்குடன் கூடிய காய்ச்சல்,டெங்குஅதிர்ச்சி அறிகுறிகள் ஆகியன அடங்கும்.)

04.நான்கு வகையானடெங்கு வைரஸ்கள் இந்நோய்க்குக் காரணமாக உள்ளன.டீ.ஈ.என்1, டீ.ஈ.என்2,டீ.ஈ.என்3,டீ.ஈ.என்4, ஒரு வகை வைரஸ் தாக்கமேற்படுத்தி நோய் ஏற்பட்ட பின்னர் அடுத்தமுறைமற்றவகை வைரஸ்களும் தொடர்ச்சியாகதாக்கக்கூடும். அப்படியான படியால் நான்கு முறை ஒருவருக்கு டெங்குக் காய்ச்சல் வரலாம்.

05. இந்நோய்காவும் நுளம்புகள், 'ஈடிஸ்இஜிப்ரஸ்' 'ஈடிஸ்அல்மோபிக்டஸ்' என இனம் காணப்பட்டுள்ளன.இவை பகல் நேரத்தில் குறிப்பாக காலை, மாலை நேரங்களில் கடிக்கும் தன்மையுடையன. இதனால் பயணம் செய்யும் போதும்,பாடசாலை, வேலைசெய்யும் இடத்திலுமென இவை கடித்து டெங்கு நோயை ஏற்படுத்தலாம். டெங்கு நுளம்புகளின் கால்களில் வெள்ளி நிற வளையங்களும், மேல் முதுகுப் புறத்தில் வெள்ளிக் கோடுகளும் காணப்படும்.

**நோயரும்பு காலம்.**

தொற்றுள்ள நுளம்புகடித்து 4-6 நாட்களில் நோயறிகுறிகள் காணப்படும்.

**டெங்கு காய்ச்சல் நோய்க் குணங்குறிகள்.**

முதலில் தலையிடி, முதுகுநோவு,களைப்பு ஆகியவை காணப்படும்.இதைத் தொடர்ந்து,

* கண்களுக்குப்பின் பகுதியில் நோவு.
* வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை.
* முதுகு நோவு.
* மூட்டுத்தசைஆகியவற்றில் கடும் நோவு.
* 5-7 நாட்கள் காய்ச்சல் நீடிக்கும்.
* சத்தி தலைச்சுத்து.
* அறிகுறிகள். 3-4 நாட்களில் குறையும். சிலவேளைடெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய காய்ச்சலாக மாறலாம்.

**டெங்கு இரத்தப் பொருக்குடன் கூடிய அறிகுறிகள்.**

இது இரத்தப்பெருக்குத் தன்மை கொண்டதாகவும், டெங்குக்காய்ச்சல் அறிகுறிகள் உடையதாகவும் இருக்கும்.

* செந்நிறப்பருக்கள் தோன்றும்.
* மூக்கு,முரசுபோன்றவற்றிலிருந்து இரத்தக் கசிவு.
* மண்ணிறமான அல்லது கறுப்பு நிற சத்தி அல்லது மலம்.
* கடுமையான வயிற்று நோ.
* கண்கள் சிவந்து இருக்கும்.
* ஈரல் பெருத்து இருத்தல்.

**அதிர்ச்சியுடன்கூடிய டெங்கு அறிகுறிகள்.**

* காய்ச்சல் திடீரெனக் குறைந்துவிடும்.
* அமைதியின்மை,தூக்கமின்மை.
* உடல் குளிர்ந்து வெளிறிக் காணப்படும்.
* பலவீனமானதும், அதிகரித்ததுமான நாடித்துடிப்பு.
* மூச்சு வாங்கல்.

இந்நிலைமைகள் நோயாளி மோசமடைவதையும்,அதிர்ச்சி நிலைக்குச் செல்வதனையும் குறிக்கும்.

அஸ்பிரின் போன்ற மருந்துகள் கொடுத்தலாகாது.பரிசிட்டமோல் மாத்திரம் சரியான அளவில் கொடுக்கப்படல் வேண்டும். டெங்கு அறிகுறிகள் காணப்பட்டதும். தாமதமின்றி நோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் பிரதான இடம் வகிப்பது நுளம்புக் கட்டுப்பாடாகும். அதிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல் ஆகும்.



டெங்கினால் பாதிக்கப்பட்ட சிறுமி

01. நீர் சேகரிக்கும் கொள்கலன்களை மூடி வைத்திருத்தலும், அடிக்கடி உரஞ்சிச் சுத்தம் செய்தலும்.

02. சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், புல்பூண்டுகளை அழித்தல்.

03. நீர்தேங்கக்கூடிய சிரட்டை, கோம்பை, பாவிப்புக்கு உதவாத சட்டி, பானை அலுமினியப் பாத்திரங்கள் போத்தல்,பேணி ஆகியவற்றை அழித்தல்,அகற்றல் உரிய நடவடிக்கை எடுத்தல்.

04. வாய்க்கால்கள், பீலிகளில் நீர் தேங்காமல் அடிக்கடி சுத்தம் செய்தல்.

05. பழைய ரயர்கள், மரப்பொந்துகளில் நீர் தேங்காது இருக்க மண் இடுதல், துவாரம் இடுதல்.

06. பூச்சாடிகள் எறும்பு ஏறாமல் இருப்பதற்காக மேடைக் கால்களுக்கு வைக்கும் ஏதனங்களிலுள்ள நீருக்கு உப்பு இடுதல், அடிக்கடி அகற்றுதல்.

07. இத்துடன் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க.

01. வீடுகளுக்கு திரைச் சீலைகள் இடுதல்,நுளம்பு புகாமல் தடுக்க வலைகள் இடுதல்.

02. நுளம்புத்திரி பாவித்தல்.

03. கால்,கைகளை மூடக்கூடிய சட்டைகளை அணிதல்.

04. சிறுவர்களை பகலில் நுளம்பு வலையினுள் படுக்க வைத்தல்.

05. நோயாளர்களை நுளம்பு வலைக்குள் படுக்கவைத்தல்.

**இந்நோய்க் கட்டுப்பாட்டில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை.**

* மக்கள் டெங்குநோய்பற்றிய அறிவையும். ஏற்படக்கூடிய ஆபத்தையும் அறிதல்.

* சூழலைச் சுத்தமாக வைத்திருத்தலும், நீர் தேங்காத முறையில் கொள்கலன்களிலுள்ள நீரை உரிய முறையில் கையாளுதல்.

* நோய் காணப்பட்டால் இரத்த மாற்றீடு பெறக்கூடிய வைத்தியசாலைக்கு நோயாளியை அனுமதித்தல், நோயாளியைத் தனிமைப் படுத்துதல்.

* சகல மக்களும் இந் நோய்க் கட்டுப்பாட்டுக்கு தத்தமது பங்களிப்பை வழங்குதல்.

இவற்றின் மூலம் இக்கொடிய நோயை சமூகத்திலிருந்தும்,எமது பகுதிகளிலிருந்தும் இல்லாமல் செய்யமுடியும்.

சி.இராஜேந்திரா
(பிராந்திய மேற்பார்வை
பொதுசுகாதார பரிசோதகர்
யாழ்ப்பாணம்.)

# சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து கிராமமட்ட ரீதியில் கருத்தரங்கு

(வட்டக்கச்சி )

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கிராம ரீதியாக சமகால அரசியல் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வகையில் கடந்த வெள்ளியன்று பிற்பகல் மூன்று மணியளவில் வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவைதுணைச்செயலர் சூரியகுமார் தலைமையில் கருத்தரங்கு இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா, தேசிய எழுச்சிப்பேரவை, மாவட்ட செயலர் பசுபதிப்பிள்ளை, மாவீரர் போராளி குடும்பநல காப்பகப் பொறுப்பாளர், கிராம சேவையாளர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,ஆலய நிர்வாகிகள், திட்டக் குழுக்கள், மாதர் சங்கங்கள், புனர்வாழ்வு நிறுவன ஊழியர்கள் ஆகியோருடன் பெருமளவான மக்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கலைவாணன், அரசண்ணா, பசுபதிப்பிள்ளை, கோட்டப் பொறுப்பாளர் சிறி, சுடர் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

இதனைத்தொடர்ந்து கிராம ரீதியான சமகாலக் கருத்தரங்குகள் நடைபெறும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. பெரியகுளம் 16ஆம் திகதி, சிவிச்சென்றர்19ஆம் திகதி, இராமநாதபுரம் 17ஆம் திகதி, கட்டைக்காடு-20ஆம் திகதி நாவல்நகர்-22ஆம் திகதி, வட்டக்கச்சி-23ஆம் திகதி, சம்புக்குளம்-27ஆம் திகதியும், இதேசமயம் 28ஆம் திகதி, வீரமுரசு நிகழ்வு மாவடி மாயவனூர் பகுதியில் நடைபெறும் என்பதனை வட்டக்கச்சி அரசியல் துறையினரின் செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது. (12)

# தொண்டர் ஆசிரியர்களுக்கான வைகாசி மாதக் கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

கியூடெக் நிறுவன தொண்டர் ஆசிரியர்களுக்கான வைகாசிமாதக் கொடுப்பனவுகள் பின்வரும் திகதிகளில் வழங்கப்படவுள்ளதென கியூடெக் நிறுவன வன்னி மாவட்ட இயக்குநர் வணபிதா ஞா.பீற்றர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு கரைதுரைப்பற்று பகுதியிலும், 26 ஆம் திகதி ஒட்டுசுட்டான் மாங்குளம்துணுக்காய் பகுதியிலும், 27ஆம் திகதி கிளிநொச்சி கரைச்சிப் பகுதியிலும்,30ஆம் திகதி கரைச்சிகண்டாவளைப் பகுதியிலும், 31 ஆம் திகதி பூநகரிப் பகுதிக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதெனதெரிவித்துள்ளார். (சோ)

# மாதாந்தப் பொதுக் கூட்டம்

(முள்ளியவளை)

முல்லைப் பிரதேசத்தில் அழகக சங்க மாதாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் பிரதேச அழகக சங்க தலைவர் செ. காண்டீபன் தலைமையில் முள்ளிய வளைப் பிரதேச அரசியல்துறை செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

அழகக நிலையங்களில் சுகாதாரம் பேணல், நிலையக் கடமை நேரங்கள் மற்றும் நிதி விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

(ஆ)

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு

வடக்கு-கிழக்கு மாகாணசபை

வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல 2084 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் 09

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு -கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவுசார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன்பின்னகத்துத்தொழில்தருநராகக்குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ITCAD பதிவு | கேள்வி பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | KN/NECORD-Ext/ED/02-Package no 1 | கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி (ஆண்கள்) அமைத்தல் | M7 | 43000/- |
| 02. | KN/NECORD-Ext/ED/02-Package no 2 | கிளி/கனகபுரம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி (பெண்கள்) அமைத்தல். | M7 | 43000/- |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறிந்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 01.07.2003 ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவுசெய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தகாரர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலை களினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. மேற்படி பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்குக்கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். அல்லது 01.07.2003 ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உபஒப்பந்தக்காரர்களாகச் செய்திருந்தால் வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி. என்ற விலாசத்திலுள்ள மாவட்டப் பிரதி திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி ஆவணங்களை 16.05.2005 ஆம் திகதியிலிருந்து 26.05.2005 ஆம் திகதி வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 ஐ (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

07. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறிந்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு 30.05.2005ஆம் திகதி பி.ப.1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று 20.05.2005 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

*தி. இராசநாயகம்,*
*தலைவர், மாவட்ட கேள்விச்சபை,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி-11966)



## வன்னி விளான்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் விழா

## 20.05.2005

*அம்பாள் அடியார்களே! வன்னி விளான்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 20.05.2005 வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.*

**குறிப்பு (1)**

*குறித்த பொங்கல் தினத்தன்று அடியார்களின் நலன் கருதி போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.*

**குறிப்பு (2)**

*பொங்கல் தினத்தன்று வாணிபம் செய்ய விரும்புவோர் 18.05.2005 முற்பகல் 10.00 மணி தொடக்கம்19.05.2005 பி.ப.5 மணி வரை எமது ஆலயமண்டபத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி பற்றுசீட்டு பெற்றுக் கொண்டதன் பின்னரே வாணிபம் நடத்த அனுமதிக்கப்படுவார்கள் என்பதைத் தயவோடு அறியத்தருகிறோம்.*

*இங்ஙனம்*
*ஆலயத்திருப்பணிச் சபையினர்*
*வன்னி விளான்குளம் மாங்குளம்.*

(6001)

## "நிகொட்" -முல்லைத்தீவு

## பொறியியலாளர் (சிவில்) பதவிக்கான வெற்றிடம்

முல்லைத்தீவு 'நிகொட்' திட்ட அலுவலகத்திலுள்ள பொறியியலாளர்(சிவில்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் சுயவிபரங்களுடன் (C.V) 2005.05.31 ஆம் திகதிக்கு முன்பதாக "அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிகொட் பொறியியலாளர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கச்சேரி,
முல்லைத்தீவு.
2005.05.14

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரச அதிபர், முல்லைத்தீவு.**

(சி-11894)

# பணிநிலை வெற்றிடம்

*முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் புதுக்குடியிருப்பு.*

**01. பதவி: எழுதுனர்**

**சம்பளக் குறியீட்டு இலக்கம்: 302/14**

**சம்பள அளவுத் திட்டம்** (5000-70x10 - 75x10 - 6450/=) / 6000 - 840x10 - 900x10 - 77400

**02 தகைமைகள்:-**

கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் 02 வருட கால அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

க.பொ.த.சாதாரண தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் கணிதம் /வர்த்தக கணிதம் /எண்கணிதம், சிங்கள/தமிழ்பாசை உட்பட 05திறமைச்சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:- 21 - 45**

கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

**குறிப்பு:-** ஆண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 25.05.2005ஆம் திகதிக்கு முன்பதாக எமக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் தலைவர், முல்லை மாவட்ட ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் இணையம், 09ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தலைவர்,**
**முல்லை மாவட்ட ப.தெ.வ.அ.கூ.ச.**
**இணையம், புதுக்குடியிருப்பு.**

(சி-11891)

யாழ்ப்பாணம்

## வடக்கு கிழக்கு மாகாணசபை

### வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல 1846-SRI (SF)

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு -கிழக்கு சனசமூக புனருத்தாரண அபிவிருத்திக்கருத் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் கருத்திட்டப்பணிப்பாளர் சார்பாக மன்னார் மாவட்டக்கேள்விச் சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்த வேலைக்குத் தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

### அட்டவணை

| இல | ஒப்பந்த இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு. | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மன்/நெகோட் /ஈடி/24 | மன்/பண்டாரவெளி அ.மு.க. பாடசாலைக்கு 100'x25' வகுப்பறைக் கட்டம் அமைத்தல். | M7 கட்டட நிர்மாணம் | 24,000/= |
| 02 | மன்/நெகோட் /ஈடி/25 | மன்னார்,மடு ஆகிய கல்வி வலயங்களில் 05 பாடசாலைகளுக்கு திறந்த வகுப்பறைகளுக்கு வலைகள் அடித்தல். | M7 கட்டட நிர்மாணம் | 24,500/= |
| 03 | மன்/நெகோட் /ஈடி/26 | மன்/முருங்கன் மகாவித்தியாலயத்திற்கு 110'x25 'இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல் | M7 கட்டட நிர்மாணம் | 50,000/= |
| 04 | மன்/நெகோட் /ஈடி/27 | மன்/வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலைக்கு 110'x25' இரண்டு மாடி வகுப்பறைக்கட்டடம் அமைத்தல் | M6 கட்டட நிர்மாணம் | 53,000/= |
| 05 | மன்/நெகோட் /ஈடி/28 | மன்/சின்னவலயன்கட்டு அ.த.க.பாடசாலைக்கு 100 'x25' வகுப்பறைக்கட்டடம் அமைத்தல் | M7 கட்டட நிர்மாணம் | 26,000/= |
| 06 | மன்/நெகோட் /எஸ்.எச்/10 | முருங்கன் மாவட்ட வைத்தியசாலையின் பணிபுரியும் ஊழியர்களுக்கான வதிவிடத்தை அமைத்தல் | M7 கட்டட நிர்மாணம் | 40,000/= |
| 07 | மன்/நெகோட் /எஸ்.எச்/11 | சிலாவத்துறை கிராமிய வைத்தியசாலையின் பணிபுரியும் மருத்துவ மாதர்களுக்கான வதிவிடத்தை அமைத்தல் | M7 கட்டட நிர்மாணம் | 23,000/= |
| 08 | மன்/நெகோட் ஈ.எக்ஸ்.ரீ /ஈடி/01 | மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான விடுதித் தொகுதி அமைத்தல்.. | M6 கட்டட நிர்மாணம் | 51,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ள சகல ஒப்பந்தக்காரர்களும் கூறுவிலை கோரலாம்.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட துறைசார் தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("ICTAD" இல் மேற்படி M7 இற்கு மேல் பதிவு பெற்றவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் , கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலை இடுவோர் வேணடப்படுகின்றனர்.

IV. "இக்டாட்"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள் அல்லது திருப்திகரமற்ற வேலைகள் என்னும் காரணங்களுக்காக தகுதியற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டவர்.

VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் நாளது திகதிவரை புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. இதன்தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக்கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவல்களை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டம் (NECORD) மன்னார் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொலைபேசி- 023-223103, தொலைநகல் - 023-2233103, ஈமெயில் distnmr@sltnct.lk.

06. கேள்வி ஆவணங்களை 16.05.2005 இலிருந்து 01.06.2005 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ' ரூபா 1000/= மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. முன்கூட்டிய கேள்விக் கூட்டமொன்று 01.06.2005 காலை 10.00 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

08. கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விவிலையையும் கேள்விவிலை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், பந்தி 9 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

09. பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, மாவட்ட திட்ட அலுவலகம், கச்சேரி, மன்னார். என்ற விலாசத்துக்கு 10.06.2005 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்..

*வே.விசுவலிங்கம்,*
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச்சபை/ அரசாங்க அதிபர்,*
*NECORD திட்டம், மன்னார்.*

(சி-11886)

# தென்னாபிரிக்காவுக்கு ஆறு விக்கெட் வெற்றி 4-வது போட்டியிலும் மே.தீவுக்கு தோல்வி



தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர் அஷ்வெல்பிறின் சின அபார ஆட்டத்தினால் அந்நாட்டு கிரிக்கெட் அணி மேற்கிந்தியதீவுகளுடனான நான்காவது ஒருநாள் போட்டியிலும் ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வரிசை மக்காயா என்டினியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது சொற்ப ஓட்டங்களில் ஆட்ட மிழந்தது. அணித்தலைவர் சந்தர்போல் எடுத்த 85 ஓட்டங்களால் 50 ஓவர் முடிவில் எட்டுவிக்கெட்டுக்களை இழந்து 231 என்ற கௌரவமான எண்ணிக்கையை அடைந்தது. கிறிஸ்கெய்ல் மார்ஷல் இருவரும் தலா மூன்று ஓட்டங்களையும், பிறையன் லாரா 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு 232 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா அவ்வணியின் அஷ்வெல் பிரின்ஸ் ஆட்டமிழக்காது பெற்ற 89 ஓட்டங்களின் உதவியுடன் நான்கு விக்கெட்டுக்களை மட்டுமிழந்து வெற்றியிலக்கை எட்டியது. தென்னாபிரிக்க அணியின் மக்காயா என்டினி 34 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அவ்வணியின் வில்லியர்ஸ், டிப்பென்னர், கலிஸ் ஆகிய மூவரும் தலா 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அணியின் எண்ணிக்கை 61ஆக இருக்கும் போது ஆட்டமிழந்தனர்.

எனினும் பிரின்ஸ், கெம்ப் இணை சிறப்பாக ஆடி வெற்றிக்கு வழிசமைத்தனர்.

# உலக 11 பேர் அணியின் தலைவராகும் கனவு நிச்சயம் பலிக்கும் என்கிறார் இன்சமாம்உல்ஹக்




உலக 11பேர் அணித் தலைவனாகும் தனது கனவு நிச்சயம் பலிக்கும் எனக் கூறுகிறார் பாகிஸ்தானின் இன்சமாம்.

உலக11பேர் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கிடையிலான சூப்பர் சீரிஸ் கிரிக்கெட்தொடர் வரும் ஒக்டோபரில் நடக்கவுள்ளது. அவுஸ்திரேலியாவில் நடக்கும் இத்தொடரில் ஒரு டெஸ்ட் மூன்று ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் மோதவுள்ளன. இதற்கான உலக 11பேர் உத்தேச அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் பாகிஸ்தான் அணியில் இருந்து ஒன்பது பேர் தேர்வாயினர். இவர்களில் தலைவர் இன்சமாமும் ஒருவர்.

வெறும் வீரராக இல்லாமல் உலக 11 பேர் அணியின் தலைவனாக வேண்டும் என்பதே தனது கனவு என இவர் கூறியுள்ளார். இது குறித்து இன்சமாம் அளித்த பேட்டி:

உலக 11பேர் உத்தேச அணியில் இடம்பெற்றது உண்மையில் சந்தோசமாக இருக்கிறது. இன்னும் தலைவராக தேர்வானால் அதைவிட பெருமகிழ்ச்சி அடைவேன். கடந்த சில மாதங்களாக சிறப்பாக விளையாடி வருகிறேன். இந்திய தொடரில் சிறந்த தலைவனாக மட்டுமல்லாமல் நல்ல துடுப்பாட்ட வீரனாகவும் செயற்பட்டுள்ளேன். இதனால் தலைவனாகும் வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன். சச்சின், ராவிட், லாரா, கலிஸ் போன்ற சாதனை வீரர்களைக் கொண்ட அணியின் தலைவராக இருப்பதைக் கௌரவமாகவும் கருதுகிறேன் இவ்வாறு இன்சமாம் கூறினார்.



சீனாவின் பீஜிங் நகரில் நடந்து வரும் சுதிர்மேன் கோப் பைக்கான டென்னிஸ் அரை யிறுதிப்போட்டியில் இந்தோ னேசியாவின் பிரான்ஸிஸ்கா ராட்னசரி ஹரி 3-11,11-8,11-2 என்ற புள்ளி கணககில் டென் மார்க்கின் கேமிலி சோரன்செனை வீழ்த்தினார். இதன் மூலம் இந்தோனேஷியா 3-0 என்ற முன்னிலையில வெற்றிபெற்று இறு திப் போட்டிக்கு முன்னேறியது.

# விளையாட்டு விதியை ஏற்கமறுத்ததால் கால்பந்து போட்டி இடைநடுவில் கைவிடப்பட்டது

விளையாட்டு விதியை ஏற்க மறுத்து விளையாட மறுத்த யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியை இட்டு விளையாட்டு ரசிகர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

எல்லைப்படை மாவீரர் நினைவாக நேற்று முன்தினம் இடம் பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மத்தியஸ்தர் கோல் கம்பத்திற்கு வெளியால் சென்ற பந்தை தவறுதலாக கோல் என சைகை செய்துவிட்டார்.

ஆனால், போட்டி விதிகளுக்கு ஏற்ப ஆட்டம் திரும்ப ஆரம்பமாவதற்கு முன்னரே தனது முடிவை மாற்றி அறிவித்தபோதிலும் அதனை ஏற்க பல்கலைக்கழக அணி வீரர்களும், பயிற்றுவிப்பாளர் மற்றும் சில விரிவுரையாளர்களும் ஏற்காது மைதானத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள்.

இதேநேரம் வீடியோ நாடாவைப் போட்டுக் காட்டியதை உபவேந்தர் மற்றும் விளையாட்டுத்துறை விரிவுரையாளர்கள் ஏற்றுக் கொண்ட போதிலும் சில விரிவுரையாளர்கள் அதிலும் உடற்கல்வியுடன் தொடர்புடையவர்கள் ஏற்க மறுத்தமை ரசிகர்களை ஆத்திரத்திற்குள்ளாக்கியது.

இதனால், ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்தில் 15 நிமிட விளையாட்டுடன் கைவிடப்பட்டது. (41)

# சூப்பர் கிராண்ட் பிரிக்ஸ் தடகளப்போட்டி சாதித்தார் பிரான்சிஸ் ஒபிக்வெலு

கட்டார் சர்வதேச தடகளப்போட்டியில், மின்னல் வேக வீரராக போர்த்துக்கலின் பிரான்சிஸ் ஒபிக்வெலு வெற்றி பெற்றுள்ளார். வெற்றிக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் பெற்ற இவர் புதிய சாதனையும் படைத்தார். ஒலிம்பிக் சம்பியன் ஜஸ்டின் காட்லின் மூன்றாம் இடத்தையே பெற முடிந்தது.


கட்டார் தலைநகர் டோகாவில் சர்வதேச தடகள கூட்டமைப்பின்அந்தஸ்து பெற்ற சூப்பர் கிராண்ட் பிரிக்ஸ் போட்டி நடக்கிறது.

நேற்று முன்தினம் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 100 மீற்றர் ஓட்டம் நடந்தது. ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் மீண்டும் சாதிப் பார் என்று கணிக்கப்பட்டது.



ஆனால் அதி வேகமாக ஓடிய ஒபிக்வெலு முதலிடம் பெற் றார். 10.05 வினாடிகளில் கடந்த இவர் புதிய சாதனை படைத்தார். முன்னதாக டோகா தடகளத்தில் கனடாவின் டொனாவன் பெய்லி 10.7 வினாடிகளில் (1998) கடந்ததே சாதனையாக இருந்தது. ஏதென்ஸ் ஒலிம் பிக்கில் வெள்ளி வென்ற ஒபிக்வெலு, இம்முறை காட்லினை முந்தி பழிதீர்த்துக்கொண்டார்.

# லூயிஸ்பிகோ தயாராகின்றார்



போத்துக்கல் அணிக்காக விளையாட சம்மதம் தெரிவித்துள்ளார் நட்சத்திர வீரரான லூயிஸ்பிகோ.

32 வயதான பிகோ சமீபத்தில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆனால் 2006 உலகக் கோப்பை கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டிகளைக் கணக்கில் கொண்டு மீண்டும் போத்துக்கல் அணிக்காக விளையாட முடிவு செய்துள்ளார்.

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி 2006இல் ஜேர்மனியில் நடக்கிறது. இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டி நடந்து வருகிறது. பிரிவு - மூன்றில் ஸ்லோவாக்கியா, போத்துக்கல் அணிகள் தலா 14 புள்ளிகள் பெற்றுள்ளன. ஜூன் 4இல் நடக்கும் முக்கியமான போட்டியில் ஸ்லோவாக்கியாவைச் சந்திக்கிறது போத்துக்கல்.

# ஷரபோவாவின் முயற்சி மீண்டும் தோல்வி



ரோம் நகரில் நடைபெற்ற ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் அரையிறுதியில் முன்னிலை வீராங்கனையான மரியா[illegible] போவாவை சுவிஸர்லாந்தின் [illegible] ஸ்னைடர் 3-6,6-3,6-1 என்ற செட்டில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

இந்தப் போட்டியில் தோல்வியுற்றாலும் பிரான்ஸ் ஓபன் தொடரில் ஒருகை பார்க்கலாம் என்று ஷரபோவா நம்பிக்கை தெரிவித்ததுடன், இதனால் ஏமாற்றமடையவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# எல்லைப்படை மாவீரர் கால்பந்து போட்டி சென்மேரிஸ், யாழ்.லீக் அணிகள் சம்பியன்

எல்லைப்படை மாவீரர் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந் தாட்ட லீக் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகமும், 40 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியும் வெற்றிபெற்றுள்ளன.

கழகங்களுக்கு இடையேயான ஆட்டத்தில் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகமும், யாழ்பல்கலைக்கழக அணியும் மோதிக் கொண்டதில் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

40 வயதிற்கு மேற்பட்டோருக்கான ஆட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக்அணியும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்அணியும் மோதிக் கொண்டதில் யாழ். லீக் உதைபந்தாட்ட அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (41)

# கிளி-மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி நாளை ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் நாளை தொடக்கம் வரும் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் கிளி. கனகபுரம் ம.வி மைதானம், கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானம், கனகபுரம் பொதுமைதானம், மருதநகர் பொதுமைதானம், கிளிநொச்சி மத்தியமைதானம் ஆகியவற்றில் நடைபெறும்மென போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

19வயது பெண்கள் கபடி கைப்பந்து 15,17,வயது பெண்களுக்கான போட்டி நாளை நடைபெறவுள்ளது.

மேலும் இருபாலாருக்குமான கைப்பந்து எல்லே ஆண்களுக்கான கால்பந்து போட்டிகளும் இருபாலாருக்குமான சதுரங்கம், ஆண்[illegible]ளுக்கான துடுப்பாட்டம், பூப்பந்து போட்டிகளும் தொட[illegible]யாக நடைபெறவுள்ளது. (சோ)











எல்லைப்படை மாவீரர் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வின் காட்சி. உதைப்பந்தாட்டத்தில் கலந்து கொண்ட மகளிர் அணியினரையும், இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ் லீக் அணிவீரர் வெற்றிக் கிண்ணத்தைப் பெறுவதையும் படங்களில் காணலாம். (41)

## சிந்தனைக்கு



விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-05-2005

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## நெருக்கடியின் உச்சம்!

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியுடனும், சுதந்திரக் கட்சிக்குள்ளும் இணக்கப்பாடு ஒன்று காணப்பட முடியாததொரு நிலையில் ஆட்சியை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்தால் என்ன? என்ற யோசனை சுதந்திரக்கட்சியின் கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் தெரிவிக்கப்பட்டமை சுதந்திரக்கட்சியின் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியின் உச்சத்தை அன்றி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடைந்துள்ள வெறுப்பின் உச்சத்தைக் காட்டுகின்றது எனின் மிகையாகாது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதனைவெறுப்பின் உச்சத்தில் கூறினாரோ அன்றி ஓர் ஆலோசனையாகக் கூறினாரோ எதுவாகினும் சரி சனாதிபதி சந்திரிகாவினதும், அரசாங்கத்தின் இயலாமையையும் வெளிப்படுத்தும் ஒன்றாகவே இக்கூற்றுக்கள் உள்ளன. அதிலும் குறிப்பாக பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகச் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளேயே இணக்கப்பாடு ஒன்று காணப்படாமை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து பெரும் நெருக்கடி மிகுந்ததாகும்.

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சியிடம் ஆட்சியை ஒப்படைத்தல் என்ற பேச்சு பகிடிக்குத்தானும் இதுவரையில் பேசப்பட்டதொன்றாக இருந்ததில்லை. ஏனெனில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் அரசியல் அதிகாரத்தை இழப்பதைக் கனவில் கூட விரும்புபவர்கள் இல்லை. ஏனெனில் அவர்கள் எதிர்த்தரப்பினரிடம் உள்ள ஆட்சியை எவ்வாறு கவிழ்ப்பது, பறிப்பது என்பது பற்றியே சிந்திப்பவர்கள், செயற்படுபவர்கள்.

தற்பொழுது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கைகளிலுள்ள ஆட்சியதிகாரம் கூட ஒருவகையில் தட்டிப்பறிக்கப்பட்டதொன்றுதான். பெரும்பான்மை அரசாங்கத்தைக் கவிழ்த்து, சனாதிபதியின் சகல அதிகாரங்களையும் பிரயோகித்து நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெறப்படாத நிலையிலும் அமைக்கப்பட்ட அரசாங்கமே இதுவாகும்.

சனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் இல்லாது இருந்திருப்பின் இவ் அரசாங்கம் பதவியைப் பிடித்தல் என்பது சாத்தியமற்றதொன்றே. இதற்குச் சபாநாயகருக்கான தேர்தலில் ஆளும் கட்சி தோல்விஅடைந்தமையே எடுத்துக்காட்டாகும். இன்றைய ஆளும் கூட்டணி அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாகவே பதவி ஏற்று, சிறு கட்சிகளுடனான கொடுக்கல்-வாங்கல் மூலமாக அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது என்பதே உண்மையாகும்.

ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டபோதிலிருந்தே இவ் அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தை நிறைவு செய்யப் போவதில்லை என்பது எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே இருந்து வருகிறது. ஏனெனில் இவ் அரசாங்கம் சிறுபான்மையாக மட்டுமல்ல, இவ் ஆளும் கூட்டணிக்குள் கொள்கை ரீதியிலான இணக்கப்பாடின்மை மட்டுமல்ல,இவ் அரசாங்கம் அரசியல்யாப்புத் தொடர்பான சவால்களுக்கும் முகம் கொடுக்கவேண்டிய தொன்றாகவேயுள்ளது.

அதாவது இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள இரு தரப்பினருக்கும் ஆட்சி அதிகாரம் மட்டுமே குறிக்கோள். இதனைத்தவிர இருதரப்பினருமே இரண்டு அதிகார மையங்கள் குறித்து தனிப்பட்ட அபிலாசை கொண்டிருந்தனர். அதாவது சனாதிபதி சந்திரிகா தனது சனாதிபதிப் பதவிக்காலத்தை நீடிப்பது அன்றி நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட பிரதமர் பதவியை உருவாக்கி அதிகாரத்தில் நிலைத்துவிடுவது என்பதை இலக்காகக் கொண்டுள்ளார்.

ஜே.வி.பியினரின் இலக்கோ சுதந்திரக்கட்சியினை ஏணியாகக் கொண்டு பாராளுமன்றத்தைக் குறிவைத்து அதிகப்படியான ஆசனங்களையும், பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களையும் பெறுவது. ஆனால் இவ்விரு தரப்பினரிடையேயும் இருந்த ஒரே உடன்பாடு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், தொடர்வதுமாகும்.

தற்பொழுதுகூட ஆளும் கூட்டணிக்குள் முக்கிய பிரச்சினைகளில் இணக்கப்பாடு இல்லாத போதும், அவை அதிகாரத்தை விட்டுவிடத் தயாராகவில்லை.

ஆனால், சுதந்திரக்கட்சியினரின் கூட்டத்தில் ஆட்சி அதிகாரத்தை எதிர்க்கட்சியினரிடம் ஒப்படைப்பது குறித்து வெளியிடப்பட்ட கருத்து வெறுப்பின்பாற்பட்டதே. ஆயினும், ஆளும்கட்சிக்கு இத்தகையதொரு நெருக்கடி விரைவில் ஏற்படப்போவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அதாவது ஆட்சி அதிகாரத்தை எதிர்க்கட்சியினரிடம் ஒப்படைக்காது போனாலும் கூட, அரசாங்கத்தை அவர்களால் நடத்த முடியாது போகும் என்பதை மட்டும் துணிந்துகூற முடியும்.

ஏனெனில், ஆளும்கட்சிக்குள் இன்றுள்ள முரண்பாடு தனியாக பொதுக்கட்டமைப்புக் குறித்ததாக மட்டும் இருப்பதாக இல்லை. அரசாங்கத்தின் பொருளாதாரக்கொள்கை கூடத் தெளிவில்லாமலே கூறப்படுகின்றது. சிறிலங்கா அரசிற்கு உதவுகின்றவர்கள் பொருளாதாரக்கொள்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென வற்புறுத்தும் அளவிலேயே நிலை உள்ளது.

ஆனால், ஆளும் கூட்டணிக்குள் இடம்பெறும் சம்பவங்கள் அதாவது ஜே.வி.பி பல விடயங்களில் எதிர்க்கட்சி போன்று செயற்படுவது இவர்கள் இடையில் பொருளாதாரக் கொள்கையில் கூட இணக்கப்பாடு இன்மையையே வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்நிலையானது நாட்டைப் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் இட்டுச் செல்வதாக மட்டுமல்ல, அரசாங்கத்தை நடத்திச் செல்வதை மிகுந்த சவால் நிறைந்ததாகவும் ஆக்கிவிடும். ஆகையினால் ஆட்சி அதிகாரத்தை எதிர்க்கட்சிகளிடம் கையளிக்கும் பாரம்பரியம் இல்லாதுவிடினும் அரசாங்கம் உள் முரண்பாடு காரணமாக கவிழ்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளது. இலங்கை வரலாற்றில் எதிர்க்கட்சிகளிடம் ஆட்சி கைமாறப்பட்டதாக இல்லாது போனாலும், கவிழ்க்கப்பட்டதற்கான வரலாறு உள்ளது.

# ஜே.வி.பி.கட்சியினர் உடன்படும் வரை பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில்லை

## சனாதிபதி சந்திரிகா தீர்மானம்



(கொழும்பு)

ஜே.வி.பி.யினர் உடன்படும் வரை சுனாமியால் பாதிப்படைந்த வடக்கு-கிழக்கு நிர்மாணப் பணிகளிற்காக விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில்லை என சனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இராஜதந்திரிகளுடன் கடந்த வாரம் கலந்தாலோசித்து பொதுக்கட்டமைப்பு தொடர்பான தனது எண்ணம் பற்றியும் தெளிவுபடுத்தினார். ஆனால், ஜே.வி.பி.யை உடன்படவைக்க ஆகக்குறைந்தது இரு வாரங்கள் மேலதிகமாகத் தேவை எனவும் கூறினார்.

ஜே.வி.பி. கடந்த வாரம் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா விடுதலைப்புலிகளுடனான எந்த உடன்படிக்கையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டுக் கட்சிக்கு முடிவைக் கொண்டுவரும் என அறிவித்துள்ளார்.

கடந்த பத்தாம் திகதி இராஜதந்திரிகளின் சந்திப்பின் போது சனாதிபதியிடம் இராஜதந்திரிகள் ஜே.வி.பி.யுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக உடன்பாடு எட்டப்படாவிட்டால் அவரின் திட்டமென்ன எனக்கேட்டதற்கு பதிலளித்த சனாதிபதி,தான் மிகவும் பலமற்ற நிலைமையை எதிர்கொள்ள வேண்டிவருமெனவும் கூறியுள்ளார்.

கடந்த ஆறாம் திகதி ஜே.வி.பி.யினருடன் கலந்துரையாடலில் ஒரு முடிவெட்டப்படாததையடுத்து சனாதிபதி தனது இந்திய விஜயத்தையும் ஒத்திவைத்தார்.

ஜே.வி.பி.யினர் தமது கட்சி பொதுக்கட்டமைப்புத் தத்துவங்களை எதிர்க்கவில்லை. ஆனால், அவ்வாறான ஒரு உடன்படிக்கை விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவினருடனேயே ஏற்படுத்த வேண்டும் என்றும் சனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

எதுவாயினும், ஜே.வி.பி. அடுத்த பொதுத் தேர்தல் வரை ஆதரவு வழங்குமானால் மட்டுமே சனாதிபதி விடுதலைப்புலிகளுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளார். சனாதிபதி இவ்வாரம் மீண்டும் ஜே.வி.பி.யினரைச் சந்திக்கவுள்ளதாகவும், பொதுக் கட்டமைப்புக் கைச்சாத்தாகாதுவிடின் நாட்டின் சுனாமி மீள் கட்டுமானப் பணிகளிற்கு பெரியளவு நிதியுதவி தேவையாகவுள்ளதை விளங்கப்படுத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மலையக தொழிற்சங்கத் தலைவர்களால் மக்களின் வாழ்க்கை பணயம் வைப்பு

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் தமது நலன்கருதி மக்களின் வாழ்கையைப் பணயம் வைப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புதிய இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டாளர் வாசுதேவ நாணயக்கார இந்தக் குற்றச்சாட்டைசுமத்தியுள்ளார். மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிராக சென்கிளயர் நீர்வீழ்ச்சிக்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கு கொண்டதன் பின்னர் கருத்துரைக்கையிலேயே வாசுதேவ இதனை குறிப்பிட்டார்.

மலையகத் தலைவர்கள் எதிர்கட்சியில் இருக்கும் போது ஒரு கொள்கையையும், ஆளும் கட்சிக்கு வந்ததன் பின்னர் ஒரு கொள்கையையும் கடைப்பிடித்து வருகின்றனர்.

அமைச்சு பதவி மற்றும் வேறு விடயங்கள் தமக்கு சாதகமாக அமையும் தறுவாயிலேயே இவ்வாறான கொள்கை மாற்றங்களை மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் மேற்கொள்கின்றனர்.

இதனை அவர்கள் ஒரு அரசியல் விளையாட்டாக மேற்கொண்டு வருகின்றனர்.

இன்றுள்ள அரசாங்கம் ஒரு சனநாயக அரசாங்கம் அல்ல. அதிகமான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதனால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமாகும்.

எனவே இந்த அரசாங்கம் மக்களின் கருத்தை செவிமடுத்து அதன் அடிப்படையில் செயற்பட வாய்ப்பில்லை.

இதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போதைய அரசாங்கமும் எவ்வித வேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை.

அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னர் ஒரு கொள்கையையும் அரசாங்கம் அமைத்ததன் பின்னர் ஒரு கொள்கையையும் காணக்கூடியதாகவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனைகளை கருத்திற்கொண்டு வர்த்தகர்களின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலேயே இந்த மேல் கொத்மலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டால் அதன் மூலம் புவியதிர்வுகள் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாவர்.

மண்சரிவுகள் ஏற்படவாய்ப்புண்டு. இயற்கை அழியும். அதேநேரம் சூழலிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

இதேவேளை தாம் தொடர்ந்தும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படகூடாது என்பதில் உறுதியாக இருந்து வந்ததாகத் தெரிவித்த புதிய சமசமாஜ கட்சியின் ஏற்பாட்டாளர் விக்கிரமபாகு கருணாரட்ன புதிய மேல் கொத்தலை திட்டத்திற்கு எதிரான அமைப்பின் நடவடிக்கைகளுக்கு தமது ஆதரவையும் தெரிவித்தார்.

# இராணுவத்தினர் தஞ்சமளிப்பதை நிறுத்தினால் ஆயுதக்குழுக்களின் நடமாட்டத்தை தடுக்கலாம்!

## மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(மட்டக்களப்பு)

ஆயுதக்குழுக்களுக்கு இராணுவ முகாம்களில் தஞ்சமளிக்கப்படுவது நிறுத்தப்படுமானால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டங்களை தடுக்க முடியுமென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை சந்திவெளி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட பொலிஸ் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் வாக்குமூலம் அளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; சம்பவ தினம் காலை இந்த ஆர்ப்பாட்டம் பற்றி அறிந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் அங்கு சென்றோம். பொதுமக்கள் இராணுவ வீதித்தடையின் இருபக்கமும் அமர்ந்திருந்து தமது போராட்டத்தில் ஈடுபட்டனர். நாங்கள் முகாமிற்கு பொறுப்பான இராணுவ அதிகாரியுடன் உரையாடிக்கொண்டிருந்த போது அங்கு ஏறாவூர் பொலிசாரும் வந்து சேர்ந்தனர். இராணுவத்தினர் மிகவும் ஆத்திரமடைந்தவர்களாகக் காணப்பட்டனர். பொலிஸ் அதிகாரிகளுக்கும் எமக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பொலிசார் நடந்து கொண்ட விதம் அநாகரிகமாக இருந்தது. ஒரு கட்டத்தில் சப் இன்ஸ்பெக்டர் எஸ்.எம்.சந்திரபால எங்களைக் கூட சுடுவோம் என்று கூறினார். இப்படி இருக்கையில், கொம்மாந்துறை பக்கமாக இருந்து வந்த இராணுவம் தடிகளைக் கொண்டு மக்களைத் தாக்கியது. மக்கள் தாக்கப்படுவதை அறிந்து வாழைச்சேனைப் பக்கமாக அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் இராணுவத்திற்கு எதிராக கற்களை எறிந்து தமது எதிர்ப்பைக் காட்டிய போது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நாம் கீழே விழுந்து படுத்தோம் என்றார். கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர், மக்கள் ஏவரும் ஆயுதம் வைத்திருக்கவில்லை. சந்திவெளி மக்களை எமக்கு நன்கு தெரியும். மக்கள் ஏற்கனவே இருக்கின்ற இராணுவ நிலைகள் அகற்றப்பட வேண்டும் எனக் குரல் எழுப்புகின்ற இக்காலகட்டத்தில் மேலும் இராணுவ நிலைகள் விஸ்தரிக்கப்படுவதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆயுதக்குழுக்கள் நடமாட்டத்தை தடுக்க வேண்டுமெனில் இராணுவ முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஆயுதக்குழுக்கள் அனைத்தும் அங்கிருந்து முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தாயக மருத்துவமனை அடிக்கல் நாட்டுவிழாவில்...








படங்கள்: சசி

# குமுதினிப் படகு படுகொலையின் 20ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

குமுதினிப் படகுப் படுகொலையின் இருபதாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.



படம்: சஜீவன்

நெடுந்தீவுப் பிரதேச செயலக முன்றலில் இருந்து காலை 9.30 மணிக்கு குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்ட முப்பத்தியாறு பேரதும் உருவப்படங்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு நெடுந்தீவு இறங்குதுறையருகே அமைந்துள்ள குமுதினிப் படுகொலை நினைவுத் தூபி மண்டபத்தில் வைக்கப்பட்டது.

தொடர்ந்து கடலில் குமுதினிப் படகு என்ற பெயர்ப்பலகையுடன் விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த படகில் சுடரினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் ஏற்றிவைக்க, பொதுச்சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். தூபிக்கான நினைவுச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த அமிர்தாப் ஏற்றிவைக்க, தொடர்ந்து தீவகக் கோட்டப் பொறுப்பாளர் இசைச்செல்வன், சு. கணேசலிங்கம், நெடுந்தீவுப் பொறுப்பாளர் அசோகன் ஆகியோர் ஏற்றினர்.

தூபிக்கான மலர் மாலையை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி, பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் உட்பட பலர் அணிவித்தனர்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட முப்பத்தியாறு பேரது உருவப்படங்களுக்கும் பெற்றோர், உறவினர் மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றினர். தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தல் நிகழ்வு நடைபெற்றது.

நினைவுரையினை பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோர் நிகழ்த்த சிறப்புரையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த அமிர்தாப் நிகழ்த்தினார். (சு)

## மட்டக்களப்பு பகுதியில் இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு பிரதேச ஞானசூரியம் சதுக்கத்தில் இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஞானசூரியம் சதுக்கம் முதலாவது ஒழுங்கை எல்லையில் உள்ள சந்தியில் போடப்பட்டுள்ள சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இவர் 25 வயது மதிக்கத்தக்கவர். நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் தமது பகுதியில் இரண்டு வெடிச்சத்தங்கள் கேட்டதாக அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## சூட்டுக்காயத்துடன் ஆணின் சடலம்

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உப்புவெளி-அலஸ்தோட்டம் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம், அடையாளம் காணப்படாத நிலையில் திருகோணமலை அரச வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. 45 வயது மதிக்கப்படும் சடலத்தின் தலைப் பகுதியில் துப் பாக்கிச் சூட்டுக்காயம் காணப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

### லெப்....

டது. இந்நூல் விழிப்புலனற்றவர்களும் ஏனையோருக்கும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் யோகி நிகழ்த்தினார்.

இதனையடுத்து நவம் அறிவுக் கூடப் பணிப்பாளர் கலைக்கோனின் தலைமையில் இசைவாணர் கண்ணனின் ஆசியோடு நவம் அறிவுக்கூடத்தின் விழிப்புலனற்ற போராளியும், கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரி மாணவனுமாகிய இதயராஜின் மிருதங்க அரங்கேற்றம் ஆரம்பமானது. பல கலைஞர்களின் பக்க இசையமைப்போடு இதயராஜின் மிருதங்க அரங்கேற்றம் வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)

### சுனாமி...

கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக நான் பணிபுரிகின்றேன். இந்த யதார்த்தத்தை நீங்கள் புறக் கணித்துள்ளீர்கள். வேறுபாடுகளை அங்கீகரித்து, வடக்குக் கிழக்கு மக்களின் சனநாயகத் தீர்ப்பை மதிப்பதற்கு நீங்கள் தயக்கம் காட்டுவதை இது கோடி காட்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (25)

### இராணுவத்தினிடையே...

நடந்ததாக கூறப்படுகிறது. எனினும் இது தொடர்பாக உண்மை நிலையைக் கண்டறிய படைத்தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### தேசியத்....

கள். இங்கு போரால் பாதிக்கப்பட்டுத் துன்பப்பட்டிருக்கின்ற மக்களுக்கும், போராளிகளுக்கும் தங்களால் முடிந்த அனைத்து சேவைகளையும் வழங்க வேண்டும் என்கின்ற ஆர்வத்தோடும் துடிப்போடும் இங்கே வந்து குவிந்தார்கள். ஆனால் எங்களுடைய மக்களுக்கு சேவைகளை வழங்கக்கூடிய அளவுக்கு எங்களது தேசத்திலே அதற்குரிய ஏற்பாடுகளோ, வசதிகளோ முழு அளவில் ஏற்படுத்தப்படவில்லை. ஏனெனில் போர்க்காலத்திலே முடிந்தளவு உள்ளூர் வளங்களை வைத்துக் கொண்டு தான் எங்களுடைய வைத்திய நிபுணர்கள் முடிந்தளவு எமது மக்களுடைய உயிரைக் காப்பதற்கும் எமது போராட்டத்தை காப்பதற்கும் தங்களால் முடிந்த முழு அர்ப்பணிப்பை செய்திருந்தார்கள். ஆனால் மேலதிகமாக அதிநவீன சிகிச்சைகள் அளிக்க வேண்டிய நிலையிலும் அது சாத்தியமற்ற ஒரு நிலை இங்கு காணப்பட்டது. இதற்கான காரணம் இங்கு அதற்கான வசதிகள் எதுவுமே இல்லை. புலம் பெயர்ந்த நாடுகளிலே இருந்து மருத்துவ நிபுணர்கள் இங்கு வருகின்ற பொழுது எங்களுக்கே பெரியதொரு தயக்கம் இருந்தது. ஏனெனில் அவர்கள் சேவை செய்ய வேண்டுமென்கின்ற முழு ஆர்வத்தோடும், எண்ணத்தோடும் இங்கு வருகின்ற பொழுது அவர்களுக்கான அந்த சூழலை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கின்ற ஒரு ஏற்பாடு எங்களிடமில்லாதிருந்தது மிகப்பெரிய குறைபாடாகவே இருந்தது. இந்த நிலையில் தான் எங்களுடைய தலைவர் பெரியதொரு எதிர்பார்ப்பை வைத்திருந்தார். எங்களுடைய மக்கள் எங்கும் அலைந்து திரியாதபடி எங்களுடைய மக்களது உயிரைக் காக்கக்கூடிய முழு நிறைவானதொரு மருத்துவமனையை நாங்கள் எங்களுடைய தேசத்திலே கட்டியெழுப்பப்பட வேண்டுமென்கின்ற சிந்தனை அவர் மனதிலே பிறந்தது. அந்த வகையில் தான் இன்று புலம் பெயர்ந்து வாழ்கின்ற எங்களுடைய மருத்துவர்களும் இணைந்து இந்த தாயக மருத்துவ மனையைக் கட்டியெழுப்ப உறுதி பூண்டிருக்கின்றார்கள். இங்கு இருக்கின்ற அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து இந்த மருத்துவமனையை மிக விரைவிலேயே நாங்கள் கட்டியெழுப்புவோம்.

இன்றைய நாள் ஒரு மிக முக்கியமான நாளாகவும், எமது மக்கள் அனைவருக்குமே ஒரு பெரிய எதிர்பார்ப்பை வழங்கிவிட்ட நாளாகவும் இருக்கின்றது. ஆகவே அந்த எதிர்பார்ப்பை நாங்கள் முழு நிறைவாக்கி வெற்றிகரமாக இம்மருத்துவ மனையை அமைத்து புலம் பெயர் நாடுகளிலே இருக்கின்ற தேசப்பற்றோடும், உணர்வோடும், சேவை மனப்பான்மையோடும் இருக்கின்ற எமது உறவுகள் மருத்துவ நிபுணர்கள் இங்கு வந்து நிறைவாகச் சேவையாற்றக்கூடிய ஒரு காலத்தை நாங்கள் அமைக்கப்போகின்றோம். மிக விரைவிலே இது செயற்படப்போகின்றது. அதற்கு எல்லோரும் ஒரு ஒத்துழைப்பை வழங்குவோம். நிச்சயமாக இந்த மருத்துவமனை வெற்றிகரமாக கட்டிமுடித்து செயற்படுவதற்கு தேசியத்தலைவர் சார்பாகவும், எமது அமைப்பு சார்பாகவும் எமது ஆசிகளையும் வழங்குகிறோம் எனத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் இரணைமடுப்பகுதியில் இம் மருத்துவமனைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் மங்கல விளக்கினை வைத்திய கலாநிதி ஜெகராஜாவும், வைத்தியர் புஸ்பாமூர்த்தியும் ஏற்றிவைக்க, பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றியதோடு, அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆரம்பமானது. அடிக்கல் நாட்டலினை வைத்தியர் கெங்காதரன் அவர்கள் ஆரம்பித்து வைக்க, அடுத்து தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் மற்றும் வைத்தியர்கள், பொறுப்பாளர்கள் எனப் பலரும் நாட்டினர். இதனையடுத்து இந்நாளினை நினைவு கூரும் முகமான மரநடுகை வைபவமும் இடம் பெற்றது.

முதல் மரத்தினை லண்டன் தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் விமலதாசன் நாட்டிஆரம்பித்து வைக்க தொடர்ந்து அரசியல்துறைப் பொறுப்பாளரும், ஏனைய வைத்தியர்கள், வருகைதந்த பிரதிநிதிகள் எனப் பலரும் நடுகை செய்தனர். தொடர்ந்து தமிழீழ மருத்துவப்பிரிவு நடுவப் பணியகப்பொறுப்பாளர் தமிழ்வாணனின் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் வைத்தியர் கெங்காதரன் அவர்கள் உரையாற்ற, தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் அவர்கள் சிறப்புரையினை நிகழ்த்தினார். அடுத்து வருகை தந்த வைத்திய நிபுணர்கள், உரையாற்றியதையடுத்து தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்களும் உரை நிகழ்த்தினார். அடுத்து சத்திரசிகிச்சை உட்பட சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இம்மருத்துவ மனையினை அமைப்பதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. (ச)


## சாவு அறிவித்தல்



அப்புப்பிள்ளை-பூபாலசிங்கம்

சங்குவேலி வடக்கு-மானிப்பாயைச்சேர்ந்த அப்புப்பிள்ளை-பூபாலசிங்கம் அவர்கள் 13.05.2005 வெள்ளிக்கிழமையன்று இரவு 10.30 மணியளவில் காலமானார்.இவர்பொன்மணியின் பாசமிகு கணவரும்,கௌரி,தயாபரன்,தயா, தயாநந்தினி, தயானி, தயாளன், நளினி, தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும். கண்ணனின் (சித்திசைவ உணவகம் கிளிநொச்சி) பாசமிகு மாமனாரும், மதுஷா,தனுஷன்,விதுஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை 16.05.2005 (இன்று) அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக உடுவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சங்குவேலி-வடக்கு,
மானிப்பாய். (சி.11969)

தகவல்:-
மகன் தயா
மரக்கறி வாணிபம்.
பொதுச்சந்தை.
கிளிநொச்சி.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.